பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

moving money for better

உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்

உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
(C-9845)

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 24 புதன்கிழமை (08.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெளியேற்றுவதே சர்வதேச விசாரணைக்கான சாவியாக அமையும்



## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெளியேற்றுவதே சர்வதேச விசாரணைக்கான சாவியாக அமையும் என்று வவுனியாவில் 1236வது நாளாக போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். 23

### கோண்டாவில் கிழக்கில்

## சமுர்த்தி உத்தியோகத்தரின் வீடு அடித்து உடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோண டாவில் கிழக்கு ஞான வைரவர் ஒழுங்கையில் அமைந்துள்ள சமுர்த்தி உத்தியோகத்தரின் வீடு



23

### ஜனாதிபதி செயலணி மூலம்

## இராணுவத்தினருக்கு தடையற்ற அதிகாரம்

### ஜஸ்மின் சூக்கா குற்றச்சாட்டு

(ஜெனிவா)

ஜனாதிபதி செயலணிகளின் உருவாக்கம் அதிகாரத்தை ஒன்று குவிப்பதுடன் உத்தியோக பூர்வமான நியமனங் கள் மூலம் ஏற்கெனவே 23

# வெலிக்கடையில் கைதி ஒருவருக்கு கொரோனா

- சமூகத் தொற்றா என அச்சம்
- சிறைக் கைதிகளிடையே பதற்றம்
- 600 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்
- கைதிகளைப் பார்வையிடத் தடை

வெலிக்கடைச் சிறைச்சாலை யிலுள்ள கைதி ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டதை யடுத்து குறித்த நபருடன் நெருங் கிப் பழகியவர்களை இனங் கண்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள் வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

குறித்த கைதியுடன் தொடர்புடைய ஏனைய 23

## யாழ். - கொழும்பு குளிரூட்டப்பட்ட ரயில் சேவை மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - காங் கேசன்துறை இடை 23

### தனிச் சிங்களவர்களுடன்

## கிழக்கு தொல்பொருள் செயலணியின் வர்த்தமானி நேற்று வெளியீடு

### சிறுபான்மையினரை தூக்கியெறிந்த கோட்டா அரசு

(கொழும்பு)

கிழக்கு மாகாண தொல் பொருள் செயலணியின் உறுப் பினர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி யுள்ளது. 23

க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
**உணவுத் தொழில்நுட்பவியல்**
பாட
மாதிரி
வினாத்தாள்
உள்ளே

## மோ.சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞன்

### சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் படுகாய மடைந்து யாழ்ப்பாணம் போதனா



23

### நல்லூர் கோவில் வீதியில்

## கார்க் கதவு திறந்ததால் விபத்துக்குள்ளானவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். - நல்லூர் கோவில் வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் நேற்று மாலை உயிரிழந்தார். திருநெல்வேலியை சேர்ந்த சின்னத்துரை 23

### பிரேசில் ஜனாதிபதிக்கு

## கொரோனா வைரஸ்



23



வீரப் பரம்பரை
ராஜராஜ
சோழப் பேரரசின்
வரலாறு
இன்று முதல் உங்கள்
வலம்புரியில்

### தென்னிலங்கை மீனவர்கள் சிறை பிடிப்பு

## வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் பதற்றம் இராணுவம், பொலிஸார் குவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உடுத் துறையில் வெளியிடத்திலிருந்து வந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்களை, பிரதேச மீன வர்கள் வளைத்துப் பிடித்து கரைக்கு கொண்டு வந்துள்ளனர். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியலமைப்பு திருத்தங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்



## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்கள் என்பன மாற்றியமைக்கப்படவேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 மற்றும் 19 ஆவது திருத்தங்களின் பிரதிபலனை அனைவரும் தற்போது தெரிந்து கொண்டுள்ளதாகவும் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சி இன்று இரண்டாக பிளவுப்பட்டுள்ள நிலையில் தேர்தல் தொகுதிகளில் ஒரு ஆசனங்களையேனும் கைப்பற்றுமா என்ற சந்தேகம் காணப்படுகிறது என்றும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சி மீது கொண்டுள்ள வெறுப்பினால் கட்சியை பிளவுப்படுத்தியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்பும் திட்டங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வகுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அத்திட்டங்களை செயற்படுத்தும் அரசாங்கத்தை மக்கள் தோற்றுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

முரண்பாடான தன்மை மீண்டும் தோற்றம் பெற்றால் எவ்வித பயனும் எவருக்கும் கிடைக்கப் பெறாது எனச் சுட்டிக் காட்டிய பிரதமர் ஆகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான பலமான அரசாங்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம - 3)

# மாகாணசபைத் தேர்தலை ரணிலே தடுத்து நிறுத்தினார்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு

(பொலனறுவை)

கடந்த காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவிடாது ரணில் விக்கிரமசிங்கவே தடுத்து நிறுத்தியதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலனறுவைப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "தற்போது சுமார் மூன்று ஆண்டுகளாக மாகாண சபை இல்லை. எனது அரசாங்கத்தில் இருந்த பிரதமரே பல்வேறு பாராளுமன்ற குழுக்களை நியமித்து மாகாண சபைத் தேர்தலை இல்லாது செய்துவிட்டார்.


இந்த நிலையிலேயே, குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத் தருமாறு நாம் கோருகின்றோம். அரசியல்வாதிகளின் அரசியல் கலாசாரம் சிதைவடைந்துள்ளது.

அரசியல்வாதிகள் பலர் ஊழல் மோசடிகளுக்கு அடிமையாகியுள்ள நிலையில் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளார்கள். இவை அரசியல் குழப்பத்தின் ஒரு பகுதியாகும். அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை எடுத்துக் கொண்டால், இவற்றை தீர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கத்தை பலப்படுத்த வேண்டும்.எதிர்க் கட்சியினருக்கு பாராளுமன்றப் பலம் சென்றால் நாடு பாரிய பிரச்சினைக்கு தள்ளப்படும். அரசாங்கம் ஒரு கட்சியாகவும், ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் இருந்தால் நாடு அழிவடையும்.

எனக்கு அதுவே நடந்தது.நான் பொலனறுவை என்பதால் என்னை எப்படியாவது மடித்து எடுக்க முடியும் என நினைத்துக் கொண்டு, அவரின் கட்சியினருடன் கலந்துரையாடி பொது வேட்பாளராக என்னைத் தெரிவு செய்தார். ஆனால் அவர்கூறிய விடயங்களை நான்கூறவில்லை.

இதனால் அவரது தந்திரம் நிறைவேறவில்லை.இதனால் தொடர்ந்தும் மோதல் ஏற்பட்டது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மரண அறிவித்தல்



## கிருஸ்ணர் இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற உதவிப் பொறியியலாளர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)

**பிறப்பு - 18.05.1927** **இறப்பு - 06.07.2020**

யாழ்ப்பாணம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் இல.123, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் இராஜரட்ணம் நேற்று முன்தினம் (06.07.2020) திங்கட்கிழமை மாலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - மீனாட்சி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பவளத்தின் அன்புக் கணவரும் மஞ்சுளா, கலாநிதி, தயாநிதி, ஸ்ரீதரன், காலஞ்சென்ற கிரிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா, கிருபராஜ், சந்திரராஜன், தபோதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆத்விகா, ஆதிரா, தாமிரா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குருசாமி, தம்பிராஜா, செல்லத்துரை, பொன்னையா, ராஜா, நடராஜா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(3231)

தகவல்:
குடும்பத்தினர்

# யஸ்மின் சூக்காவிற்கு எதிராக இலங்கை அரசு ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## மனித உரிமைகள் அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு



(ஜெனிவா)

**சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்காவிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு மனித உரிமைகள் அமைப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.**

அத்துடன், இலங்கை அரசாங்கத்தின் அச்சுறுத்தல்கள் மற்றும் அவதூறுகளை எதிர்கொண்டுள்ள யஸ்மின் சூக்காவிற்கு ஆதரவாக 50 இற்கும் மேற்பட்ட மனித உரிமை அமைப்புக்களும் 150 முக்கிய நபர்களும் கையெழுத்திட்டுள்ளதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி யஸ்மின் சூக்கா, வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இலங்கையின் தேசிய புலனாய்வுத்துறை பணிப்பாளர் மேஜர் சால்லேயை அவமரியாதை செய்யும் வகையில் இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, கடந்த 18 ஆம் திகதி யஸ்மின் சூக்காவிற்கு எதிராக இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அலுவலகங்களுக்கு சுரேஸ் சால்லே தனது முறைப்பாட்டைத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், தன்மீது சுமத்தப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்காக யஸ்மின் சூக்காவும், அவரின் நிறுவனமும் 10 பில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்கவேண்டும் என்று கோரி சால்லே சட்டக் கோரிக்கை கடிதத்தை அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், யஸ்மின் சூக்காவிற்கு ஆதரவாக மனித உரிமைகள் அமைப்புக்கள் சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இலங்கை அரசாங்கத்தினால் யஸ்மின் சூக்காவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக கையொப்பமிட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தமது கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்த விரும்புகின்றன.

சூக்காவிற்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுக்களும் அச்சுறுத்தல்களும் மனித உரிமைகள் பாதுகாவலராகவும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தரணியாகவும் உள்ள சூக்காவினுடைய நீண்டகாலப் புகழை பாதிப்படையச் செய்வதாக உள்ளன.

2010 ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது புரியப்பட்ட போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் பற்றி ஐ.நா.பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கும் மூன்று நிபுணர்களைக் கொண்ட குழுவில் யஸ்மின் சூக்கா நியமிக்கப்பட்டார்.

இந்நில்லையில், சூக்காவிற்கு எதிராக இலங்கை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டிருப்பவை சூக்காவிற்கும் அவருடைய அமைப்பிற்கும் மனித உரிமைகள் சமூகத்திற்கும் எதிரான தாக்குதல் மட்டுமல்லாது இது அவருடைய பணியுடன் தொடர்புபட்ட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் தப்பியவர்கள் மீதான தாக்குதலும் ஆகும்.

. சூக்காவிற்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை சர்வதேச உரிமைகளை மீறுவதாக உள்ளதுடன் நீண்டகாலமாக உள்ள அநீதி மற்றும் இலங்கையில் நிலவும் குற்றத்தில் இருந்து பாதுகாப்பு வழங்குதல் ஆகியவற்றில் இருந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை திசைதிருப்புவதற்கான இலங்கை அரசாங்கத்தின் இன்னுமொரு முயற்சி இதுவாகும்.

இந்நிலையில் இவற்றுக்கு எதிராக கையொப்பமிட்டுள்ள அனைவரும், பொறுப்புக்கூறலுக்கும் மற்றும் மனித உரிமைகள் பற்றிய குறிக்கோள்களுக்காகவும் பாடுபடுபவர்களை தொடர்ச்சியாகப் பலவீனப்படுத்துவதை விட மனித உரிமைகளை மதிப்பதற்கு தனது தீவிரமான ஈடுபாட்டை வெளிக்காட்டுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கின்றோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்

எளிமையும், பண்பும், அனுபவமும் நிறைந்த
பிரதிநிதிகளை தெரிவு செய்வோம்.
-வலிகாமம் மக்கள்-



6

தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

7



பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

(C-021)
1 2 3 4 5 6 7 8 9 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# தமிழ்த் தேசத்தை அழிக்கும் நடவடிக்கையை அரசு திட்டமிட்டு முன்னெடுத்து வருகிறது

## கஜேந்திரகுமார் சாடல்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு-கிழக்கில் இருக்கும் தமிழ்த்தேசத்தை அழிக்கும் நடவடிக்கைகளையே இலங்கை அரசு திட்டமிட்டு முன்னெடுத்து வருகிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டினார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2009 ஆம் ஆண்டு போர் முடிவிற்கு வந்த பிற்பாடும் கூட அடுத்து ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும்தாம்பயங்கரவாதத்திற்கு எதிரான போரை நடத்தியதாகவும்,அந்த பயங்கரவாதத்திற்கு எதிரான போரை முடிவிற்கு கொண்டு வந்ததாகவும் 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் நாட்டில் தீர்க்க வேண்டிய பிரச்சினை எதுவும் கிடையாது என்ற ஒரு கருத்தை மாத்திரமே இலங்கை அரசு ஊடகங்களுக்கு கூறி வருவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அரசு பயங்கரவாதத்தை அழிப்பதாக கூறி



ஒரு இனப்படுகொலை புரிந்ததற்கு சர்வதேச சமூகமும் ஒத்துழைப்பு வழங்கியிருந்ததை யாரும் மறுக்க முடியாது. இத்தீவில் வடக்கு- கிழக்கில் இருக்கும் தமிழ்த் தேசத்தை அழிக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசு திட்டமிட்டு முன்னெடுத்து வருகிறது.

எமது இனப் பிரச்சினைக்கு மூலகாரணமாக இருக்கும் ஒற்றையாட்சி முறையை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை சுட்டிக்காட்டி தொடர்ச்சியாக 3 தடவைகள் நிராகரித்து வந்துள்ளோம்.

போர் நிறைவுற்ற காலம் தொடக்கம் இன்றுவரைக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் 13 ஆம் சட்டத்தை ஏற்றுக் கொண்டால் போதும். ஒற்றையாட்சிக்குள்ளேயே நாம் ஏதாவதொரு கட்டமைப்பை ஏற்றுக் கொள்ள தயார் என இதுவரைக்கும் கூறி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-2-8)

# ரணிலின் பதவியைப் பெற்றுக் கொடுத்தவர்கள் தமிழரின் பிரச்சினையை தீர்க்காதது ஏன்?

## கூட்டமைப்பிடம் கேட்கிறார் சுரேஷ்



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் யுத்தத்திற்கு பிற்பாடு நாங்கள் ஐக்கியப்பட்டு இயங்குவதனூடாகவே இலங்கை அரசாங்கத்திடம் இருந்து எமக்கு உரித்தான உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில் நீங்கள், நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக 16 பேரை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், தமிழ் மக்களிடமிருந்து பெற்ற ஆணை, தமிழ் மக்களுக்கு கொடுத்த உறுதி மொழிகள் என எதனையும் நடைமுறைப்படுத்தியதாக இல்லை என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கொள்கை பரப்புக் கூட்டம் வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டரங்க மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் தான் விரும்பிய ஆணைக்குழுக்களை அமைத்து.இங்கு இருக்கக்கூடிய தொன்மையான புராதன இடங்களை பௌத்தத்திற்குரியது என்று உரிமை கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்று நிலவுகின்றது. இந்த நாட்டில் சிங்கள மொழி ஏறத்தாழ 6 ஆம் நூற்றாண்டளவில் தான் உருவாகத் தொடங்கியது. ஆனால் தமிழ்மொழி எப்போது தோன்றியதென்று யாருக்கும் தெரியாது.

இலங்கையில் வாழக்கூடிய தமிழ்த் தேசிய இனம் என்பது அழிந்து கொண்டிருக்கக் கூடிய தேசிய இனமாக இருக்கின்றது. அவர்கள் திட்டமிட்ட வகையில் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஐ.நா.சபையின் கணக்கின்படி யுத்தத்தினுடைய இறுதி நாட்களில் 70 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றது.

தமிழ் மக்களினுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களின் எதிர்காலத்தை சரியான வகையில் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அதிலிருந்து வெகு தூரமாக விலகி இலங்கை அரசாங்கத்தை பாதுகாப்பது மாத்திரம்தான் தனது முதன்மையான கடமை என நினைக்கின்றார்கள்.

அரசியல் கைதிகளினுடைய விடுதலை, காணிகள் விடுவிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான ஒரு தீர்வு இவை அனைத்தையும் அவர்கள் செய்திருக்க முடியும். ஏனென்றால் இந்த அரசாங்கத்தை பாதுகாத்து கொண்டிருந்தவர்கள் அவர்கள். ரணில் விக்கிரமசிங்க பதவி பறிக்கப்பட்டு மகிந்த ராஜபக்ஷ பிரதமராக்கப்பட்ட பொழுது அதனைத் தடுத்து மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கிய பெருமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. எனவே, இவர்களால் பதவி பறிபோன ஒருவரை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்த முடியுமாக இருக்கின்றது என்றால் ஏன் தமிழ் மக்களினுடைய சாதாரணமான பிரச்சினைகளைக் கூட தீர்க்க முடியவில்லை? தமிழர்களை கொலைசெய்து புதைத்ததனால் உயர் நீதிமன்றம் தூக்குத்தண்டனை வழங்கிய ஒருவரை கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட முடியுமாக இருந்தால் 15 வருட காலமாக சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது. அதற்கான ஒரு காத்திரமான பங்களிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் செய்யவில்லை.

இன்றைய சூழல் என்பது சர்வதேச ரீதியாக பல மாற்றங்களை கொண்டு வருகின்றது. இந்த சந்தர்ப்பங்களை தமிழ் மக்களினுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

எமது மக்களுடைய உரிமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். எனவே, இனமோதல் தீர்வுக்கான புதிய சிந்தனை, புதிய அணுகுமுறை, புதிய தலைமை ஆகியவை தேவை.

இதன் மூலமே கலாசாரத்தை வளர்க்க முடியும். மாற்றத்திற்கு வாக்களிப்போம். சிறந்த மாற்றத்தின் சின்னமான மீன் சின்னத்திற்கு வாக்களியுங்கள என சுரேஷ் பிரேமச்சந்திரன் தொடர்ந்து தெரிவித்தார். (ஜ-4)

# ஆட்சியாளர்கள் தீர்வு பற்றிப் பேசுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலேயே

## கூட்டமைப்பின் சுரேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரசியல் தீர்வு பற்றியும் மனிதவுரிமை பற்றியும் அடிக்கடி பேசுவதற்கு கடந்த அரசாங்கத்தில் கூட்டமைப்பு முன்னெடுத்த இராஜதந்திர நடவடிக்கைகளே காரணமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளருமான சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரது அறிக்கையில்,

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் தமிழ்மக்கள் மீது பேரழிவை ஏற்படுத்திய இறுதியுத்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளை பலமிழக்க செய்ததற்கு வெளிநாடுகளின் ஆதரவை பெற்றுக்கொண்ட மகிந்த ராஜபக்ஷ போரை முடிவுறுத்திய பின்னர் தமிழ்மக்களுக்கு தீர்வை வழங்குவேன் என வாக்குறுதி வழங்கியதுடன் போர் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு வருகைதந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரிடமும் தீர்வு தொடர்பாக உறுதிமொழி அளித்திருந்தார்.

இருப்பினும் போர் மௌனிப்பை தமது வாழ்நாள் சாதனையாகவும் பெருவெற்றியாகவும் கருதி அதன் விம்பத்தில் அடுத்தடுத்து தேர்தல் வெற்றிகளை கண்டதும் தமிழர்களை தோல்வியுற்ற தரப்பாகவும் பலமிழந்த தரப்பாகவும் நடத்தியதுடன் இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் உட்பட அனைத்து உரிமைகளையும் மறுத்து வந்ததுடன் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களையும் உதாசீனம் செய்து தமிழர்களை சிறுமைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.



இந்த வேளையில் தூர நோக்கோடும் இராஜதந்திரத்துடனும் அரசியலை அணுகிய கூட்டமைப்பு 2014 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கி அவரை வெற்றிபெற செய்ததன் மூலம் தம்மை தோற்கடிக்க முடியாது என எண்ணியிருந்த ராஜபக்ஷ குடும்பத்தை தோல்வியின் வலியை உணரவைத்ததுடன் அவர்களால் தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட பல அடிப்படை உரிமைகளையும் மீட்டெடுக்க முடிந்தது.

எனவே தமிழ்மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் காத்திரமான நடவடிக்கைகளை உணர்ந்துகொண்டு தமிழ் மக்களுக்காக சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்து ஆக்கபூர்வமாக பயணிக்கும் கூட்டமைப்பை இம்முறை தேர்தலில் மேலும் பலப்படுத்தி எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதுடன் அதற்கு சமாந்தரமான எமது இனத்திற்கான தற்சார்பு பொருளாதார கட்டமைப்பையும் வளர்த்தெடுப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்வோம் என அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதனூடாக சமூகப் பிறழ்வுகளைத் தடுத்துவிட முடியும்

## அடுத்த ஐந்து வருட குறிக்கோள் இது என்கிறார் அங்கஜன்



(யாழ்ப்பாணம்)

கடந்த கால அரசாங்கத்தில் பணம் கொடுத்தால் தான் வேலைவாய்ப்பு என்று இருந்த நிலையை மாற்றி, அரச வேலை வாய்ப்பு என்பது நேர்மையாகவும் இலவசமாகவும் கஷ்டப்பட்ட மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக தற்போது வரை முழுமையாக போராடி வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.- கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலைவாய்ப்புக்களை அதிகமாக பெற்றுக் கொடுத்துள்ளதாக வெளிப்படுத்திக் கொள்பவர்கள் நேர்மையாக பணம் பெறாது பெற்றுக் கொடுத்தார்களா? என்பது மக்கள் மனதிலுள்ள பொதுவான கேள்வியாகும். நாம் இதுவரை உண்மையாக வேலை தேவைப்படுபவர்களுக்கு, கஷ்டப்படுபவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை கொண்டு சேர்த்தோம்.

எதிர்கா லத்தில் இன்னும் அதிகமாக பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. காரணம் இன்று நாட்டில் 7.4 வீதமான இளைஞர்கள் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகங் கொடுத்துள்ளனர்.

இந்த வேலையில்லாப் பிரச்சினைகளே சமூகத்தில் இளைஞர்களிடத்தே குற்றச் செயல்கள் அதிகம் இடம்பெற வழிசெய்கிறது. இதனால் வேலையற்றவர்களுக்குக்கான வேலை உருவாக்கம் செய்யப்படல் வேண்டும்.

எனவே அடுத்த 5 வருடத்தில் வேலை உருவாக்கத்தில் அதிக கவனம் மேற்கொள்ளப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.- கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளர்களான பவதாரணி ராஜசிங்கம் மற்றும் தொழிலதிபர் வரதராஜன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். (ஐ-8)

## மேல் மாகாணத்தில் 388 பேர் கைது

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின்போது 388 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்றுக்காலை 5 மணிவரை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கை யின் போதே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தேக நபர்களில் 145 பேர் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டதுடன் சட்டவிரோத மதுமானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 113 பேரும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 92 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர ஏனைய போதைப் பொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 38 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ-4)

## 125 ஆசனங்களைக் கூட ஆளும் கட்சியால் பெறமுடியாது

### தேசிய மக்கள் சக்தி கூறுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 125 ஆசனங்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் கே.டி.லால்காந். தேர்தலின் பின்னர் ஸ்திரமானதொரு அரசாங்கத்தை அமைப்பதில் பெரும் சவால்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் தம்மால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறிக் கொண்டிருந்தனர். தற்போது 125 ஆசனங்களைப் பெறுவோம் என்



கின்றனர்.

ஆனால் 2010 ஆம் ஆண்டு யுத்தத்தை நிறைவு செய்த போது கூட ராஜபக்ஷக்களால் மூன்றில் இரண்டைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-4)

## ஹோட்டல் உரிமையாளர் சடலமாக மீட்பு

(பிலியந்தலை)

பிலியந்தலையில் ஹோட்டல் வளாகத்தில் ஹோட்டல் உரிமையாளர் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஹோட்டல் உரிமையாளரின் மனைவி காயங்களுக்குள்ளாகிய நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-4)

## ஜேர்மனிக்கான புதிய தூதுவர் நியமனம்

(கொழும்பு)

ஜேர்மனிக்கான இலங்கையின் புதிய தூதுவராக கூட்டுறவு தொழில் வல்லுநர் மனோரி உனம்புவா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியின் முன்னாள் தூதுவர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்குப் பதிலாகவே மனோரி உனம்புவா அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை அவர் சுவிட்சர்லாந்துக்கான இலங்கையின் தூதுவராகவும் கடமையாற்றுவார். (ஐ-4)






# அரசியல் கட்சிகள் விதிமுறைகளை மீறாது செயற்பட்டால்

# தேர்தலை சுயாதீனமாக நடத்தமுடியும்

## யாழ்.அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் தேர்தல் விதிமுறைகளை மீறாது செயற்படுமிடத்து எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலினை சுயாதீனமாக நடத்தமுடியும் என யாழ்.அரச அதிபரும், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான க.மகேசன் தெரிவித்துள்ளார்.**



யாழ். மாவட்ட செயலகத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும் யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடினோம்.

அதனடிப்படையில் எவ்வாறு தேர்தல் பிரசார அலுவலகங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.அது எந்தக் காலப் பகுதிக்குள் அது அமைக்கப்பட வேண்டும். எந்தக் காலப்பகுதியில் அகற்றப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதேபோல கொவிட் 19 கொரோனாத் தொற்று நிலைமை இருக்கும் பொழுது எவ்வாறான சுகாதார நடைமுறைகளினை தங்களுடைய அலுவலகங்களிலும் அத்தோடு வாக்காளர்களை அணுகும் போதும் பின்பற்ற வேண்டியமுறை. அதே போல பிரசார நடவடிக்கைகள் கூட்டங்களின் போதும் எவ்வாறான நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய விளக்கமான அறிவுரைகளை வழங்கி இருக்கிறோம்.

பொதுக் கூட்டங்களுக்கான கட்டுப்பாடு எந்தெந்த இடங்களில் எவ்வாறான கூட்டங்களை நடத்த முடியும் போன்ற விளக்கங்களையும் கொடுத்திருக்கின்றோம்.அதேபோல் கோவில்கள்,வழிபாட்டுத் தலங்களை தவிர்த்து வேறு இடங்களில் அவர்களுடைய கூட்டங்களை நடத்த வேண்டுமென வும் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

தேர்தல் கடமைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும்.அதற்கான நட்வடிக்கைகள் அதற்கென நியமிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் இயங்குகின்றன.

ஆகவே பொலிஸார் முழு நடவடிக்கையிலும் ஈடுபடுபவர்களாக இருந்தபோதிலும் நிலைமைகளை அனுசரித்து சில சந்தர்ப்பங்களில் மேலதிக பாதுகாப்பு கருதி பொலிஸார் இராணுவத்தின் உதவியை கோரினால் மட்டுமே இராணுவத்தினர் தலையிடுவார்கள்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவிக்கும்போது இராணுவத்தை அழைப்பதாக இருந்தால் அந்த அழைப்பு தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். இது தொடர்பில் ஆணைக்குழுவுக்கு தெரியபடுத்தவுள்ளோம்.

இதைத்தவிர, சில விதிமுறைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று வரை 61 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு வன்முறை சம்பவம் உட்பட ஏனையவை தேர்தல் விதிமுறை மீறலான முறைப்பாடுகளாகப் பதியப்பட்டுள்ளன.

அவை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உரிய தரப்பினருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

தேர்தல் விதிமுறைகளை மீறாது வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் செயற்பட்டால் தேர்தலை மிகவும் சுயாதீனமாகவும் ஜனநாயகமாகவும் நடத்த முடியும்.

தேர்தல் கண்காணிப்பை மேற்கொள்வதற்காக இரண்டு உள்ளூர் நிறுவனங்கள் செயற்பட உள்ளன "தேர்தல் வன்முறையை கண்காணிக்கும் அமைப்பு "மற்றும் "பவ்ரல்" அமைப்பு ஆகியவற்றிற்கு இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் தேர்தல் நடவடிக்கைகளை சுயாதீனமான முறையில் கண்காணிக்கவுள்ளனர்.


யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தின் தொலைபேசி இலக்கங்கள் 021 320 7296, தொலைநகல் 021 222 2628 என்பன வழங்கப்பட்டுள்ளன.

076 645 6087 என்ற viber இலக்கத்துடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் தேர்தல் விதிமுறை மீறல் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தகவல்களை தெரியப்படுத்த முடியும் எனவும் யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார். (4-5)

# மாவை கலட்டியில்

# மர்மமான முறையில் இறந்த 12 ஆடுகள்

## அச்சத்தில் மக்கள்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மாவை கலட்டி,கொல்லன் கலட்டியைச் சேர்ந்த பரராஜசிங்கம் என்பவருக்குச் சொந்தமான ஆட்டுப் பட்டியில் 12 ஆடுகள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதியில் காயங்களுடன் மர்மமான முறையில் இறந்துள்ளன.குறித்த ஆட்டுப் பட்டியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேய்ச்சலுக்குப் பின் இரவு பட்டியில் அடைத்த நிலையில் காலையில் சென்று பார்த்த போதே ஆடுகள் கடிகாயங்களுடன் இருந்திருப்பதை அவதானித்தார். இவ்விடயம் தொடர்பாக ஆட்டு உரிமையாளரினால் கிராம உத்தியோகத்தருக்கு அறிவித்தல் விடுத்தது டன் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

குடிமனைகள் அதிகம் உள்ள குறித்த கிராமத்தில் 12 ஆடுகள் காயங்களுடன் இறந்தமையால் ஊர் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.இந்த ஆடுகள் சுமார் இரண்டு இலட்சம் பெறுமதி உடையவை என உரிமையாளர் தெரிவித்தார். (2-5)




## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நாளை 9 ஆம் திகதி காலை 1008 சங்காபிஷேகம் நடைபெறும். (4-5-18)

---

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெற்று வருகிறது.

இதில் 12 ஆவது நாளாகிய நாளை 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் நல்லூர் தவத்திரு வேலன் சுவாமியின் ஆன்மீக உரை இடம்பெறும். (2-5)

# வெலிக்கடை கைதிக்கு கொரோனா

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இதனை அறிவித்துள்ளார்.

குறித்த கைதி, கந்தக்காட்டிலுள்ள போதைப்பொருள் அடிமையானோர் புனர்வாழ்வு மையத்திலிருந்தவர் (சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வு நிலையம், கந்தக்காடு) எனவும் அவரை கடந்த ஜூன் 27 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றாளர் என குறித்த நபர் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவருடன் தொடர்புபட்டவர்கள் அனைவருக்கும் தற்போது பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விளக்கமறியல் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் ஆகியோர் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# அரச வாகனங்களை பறிமுதல் செய்வதற்கான பொலிஸாரின் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தி, இன்னும் ஒப்படைக்கப்படாத அரச வாகனங்களை பறிமுதல் செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



அதன்படி 11 அரச வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் இரண்டு வாகனங்கள் மாத்திரம் இதுவரை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை மார்ச் 2 ஆம் திகதிக்குள் அரச வாகனங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். எனினும் அந்த அமைச்சர்கள் அவ்வாறு வாகனங்களை ஒப்படைக்கத் தவறியுள்ளதாகவும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் சட்டங்களை மீறி அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் அவற்றை பறிமுதல் செய்யவும் தேர்தல் ஆணையகம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இருவரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

கட்டுகஸ்தொட்ட - பெல்கொல்ல நீர்த்தேக்கத்திலிருந்து பாடசாலை மாணவர்கள் இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கண்டி, நவயால தென்ன பகுதியைச்சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் ஒருவனும் 16 வயதுடைய யுவதி ஒருவரும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கட்டுகஸ்தொட்ட - பெல்கொல்ல நீர்த்தேக்கத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக கட்டுகஸ்தொட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (ஜ-4)

# கடல் எல்லைகளில் பாதுகாப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக நாட்டிற்குள் வரும் நபர்களை கைது செய்தல் மற்றும் கடல் எல்லைகளை பாதுகாத்தல் தொடர்பிலான விசேட வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

விசேடமாக இந்தியாவில் இருந்து கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் கடல் மார்க்கமாக வடக்கு பிரதேசங்களுக்கு வரும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இந்த நிலைமையை கட்டுப்படுத்த கடற்படையினர் விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுத்ததுடன் அதனைத் தொடர்ந்தும் அதிகரிப்பதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சுனில் கொலை விவகாரம்; எண்மருக்கும் மறியல்

(கொழும்பு)

இலங்கை சுய தொழிலாளர் தேசிய ஆட்டோ சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன்னவை கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த 8 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 10 ஆம் திகதி மிரிஹான பிரதேசத்தில் வைத்து இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# ஹெரோயினுடன் "பெபுன்" கைது!

(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த குழு உறுப்பினரான 'பெபுன்' என அழைக்கப்படும் கிரிஷான் நிலங்க தபரே என்பவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அத்துருகிரிய பகுதியில் குறித்த நபரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தி னம் இரவு கைது செய்துள்ளனர்..

இந்த கைது நடவடிக்கையின் போது அவரிட்மிருந்து ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் - 1980 திருவாதிரை 15 1/2 கிரகபாவம் செவ்வாய் குற்றம் இல்லாத மணமகனுக்கு பொருத்தமான மணமகளைத் தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு
0773597310,0773567644
(C-9833)



## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

08.07.2020



யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை
திருமதி.புவனேஸ்வரி சிவஞானசுந்தரம்பிள்ளை
B.A. (Hons) Dip.in. Edu. SLTS-I

"காரியத்தில் கருத்தூன்றி சேவையிலே சிறப்புற்ற செம்மல்"

பாடசாலைச் சமூகம்,
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 6 ½ செவ் 10 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் மட்டும்<br>தொ.இ: B/10917 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 28 செவ் 4 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: பொறியியல் பட்டதாரி CIMA பூர்த்தி செய்துள்ளார் திட்ட முகாமையாளர்.<br>எதிபார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கி உத்தியோகத்தர் போன்றோர்<br>தொ.இ: G/10955 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 25 ¼ செவ் 7 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: M.B.B.S. Doctor.<br>எதிர்பார்ப்பு: M.Sc, PhD, I.T, B.Sc, CIMA, B.Com, Management படித்தவர்கள் உயர் உத்தியோகம்<br>தொ.இ: B/10918 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Com(SL), MBA (UK) தனியார் வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/10960 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 56¼ செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. அவுஸ்திரேலியாவில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10921 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 56 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: Charted Accou ntant, CIMA, Finance Manager (Private)<br>எதிர்பார்ப்பு: உயர் கல்வித்தகைமை. Accountant, Engineer, IT, Doctor, போன்ற உத்தியோகத்தர்கள்<br>தொ.இ: G/10962 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 46 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. இ.போ.ச.வாகன திருத்துநர் (அரச)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10924 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Tech (Food Engineering). Selected in Graduated Appointment.<br>எதிர்பார்ப்பு:. தகுந்த வரன்<br>தொ.இ: G/10969 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




## லடாக் எல்லைப்பகுதியில்

# பதற்றத்தை தணிக்க பின்வாங்கிய சீனப் படைகள்; இந்தியப் படைகளும் பின்வாங்கும் என நம்பிக்கை



(பீஜிங்)

இந்தியா - சீனா பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து மோதல் நடைபெற்ற லடாக் எல்லையில் இருந்து சீனப் படைகள் பின்வாங்கின. அங்கு பதற்றத்தை தணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லைத் தகராறு இருந்து வருகிறது.

கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையே ஏற்கனவே கைகலப்பு நடந்த நிலையில், அங்குள்ள கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த மாதம் 15 ஆம் திகதி சீன இராணுவ வீரர்கள் அத்துமீற முயன்றபோது ஏற்பட்ட மோதலில் இந்திய வீரர்கள் 20 பேர் வீர மரணம் அடைந்தனர். சிலர் காயம் அடைந்தார்கள். சீனத் தரப்பில் 35 இற்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தனர்.

இதைத்தொடர்ந்து, எல்லையில் சீனா கூடுதல் படைகளைக் குவித்தது. சீனாவின் அச்சுறுத்தலை சமாளிக்க இந்தியாவும் படைபலத்தை அதிகரித்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதற்கிடையே எல்லையில் பதற்றத்தை தணிக்கும் முயற்சியில் இரு தரப்பு இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் தூதரக மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய-சீன இராணுவ உயர் அதிகாரிகள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, மோதல் போக்கை விலக்கிக் கொள்வது என்றும், எல்லையில் இருந்து படைகளை விலக்கிக்கொள்ள முன்னுரிமை அளிப்பது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அப்போது, பிரதமர் மோடி, சீன அதிபர் ஜின்பிங் இடையே முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட கருத்து ஒற்றுமையின் வழிகாட்டுதல்படி எல்லையில் அமைதியை நிலைநாட்டுவது என்றும், அந்த வகையில் எல்லையில் பதற்றத்தை தணிக்க இருதரப்பும் படைகளை விலக்கிக் கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து, எல்லைப் பகுதியில் இருந்து நேற்று படைகளை விலக்கும் நடவடிக்கையை சீன இராணுவம் தொடங்கியது.

கல்வான் பள்ளத்தாக்கில் மோதல் நடைபெற்ற 'ரோந்து பாயிண்ட் 14, 15 மற்றும் 16', 'கோங்ரா ஹாட் ஸ்பிரிங்' பகுதிகளில் எல்லை கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் முன்னணி நிலைகளில் நிறுத்தப்பட்டு இருந்த சீன வீரர்கள் அங்கிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் பின்வாங்கிச் சென்றனர். தாங்கள் அமைத்து இருந்த கூடாரங்கள் உள்ளிட்ட தற்காலிக கட்டுமானங்களையும் பிரித்து எடுத்துச் சென்றனர்.

இதனால், லடாக் எல்லைப் பகுதியில் கடந்த 2 மாதங்களாக நீடித்து வந்த பதற்ற நிலை குறைந்து வருகிறது.

சீனப் படை விலக்கல் பற்றி பீஜிங் நகரில் அந்த நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் தெரிவிக்கையில்,

பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருப்பதாகவும் கல்வான் பள்ளத்தாக்குப்பகுதியில் எல்லை கட்டுப்பாட்டுக் கோடுப் பகுதியில் முன்னணி நிலையில் உள்ள படைகளை விலக்கிக் கொள்ளும் நடவடிக்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட கருத்து ஒற்றுமையின் அடிப்படையில் சீனாவைப் போல் இந்தியாவும் படைகளை விலக்கிக் கொள்ளும் என நம்புவதாகவும் எல்லையில் பதற்றம் ஏற்படுவதை தடுக்க இராணுவ மற்றும் தூதரக மட்டத்தில் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் நடவடிக்கை தொடரும் என்றும் தெரிவித்தார். (2-5)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் எட்டுப்பேர் பலி, ஆறுபேர் படுகாயம்

## மொசாம்பிக்கில் துயரம்




(மாபுடோ)

மொசாம்பிக் நாட்டில் இயற்கை எரிவாயு எடுக்கும் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆதரவு பெற்ற அல் ஷபாப் பயங்கரவாத இயக்கம் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அல் ஷபாப் பயங்கரவாதிகள், பொதுமக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை குறிவைத்து தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இதற்கிடையில், அந்நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள கபோ டெல் ஹோடா மாகாணத்தில் அயல்நாட்டை சேர்ந்த தனியார் எண்ணெய் நிறுவனம் இயற்கை எரிவாயு எடுக்கும் பணிகளை பல கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கியுள்ளது.

இதற்கான தொழிற்சாலை அமைக்கும் பணியில் நூற்றுக்கணக்கானவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இயற்கை எரிவாயு எடுக்கும் நிறுவனத்தில் கட்டட ஊழியராக வேலை செய்தவர்கள் நேற்று தங்கள் வேலையை முடித்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் சென்ற வாகனம் மொகிம்பா டா பர்யா என்ற பகுதியை கடந்தபோது அதை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் வாகனத்தில் இருந்த 8 பேர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் 3 பேரை பயங்கரவாதிகள் கடத்தி சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2)

# கொரோனா...

## உலகளவி...



## நடுவா...

## இரண்டு விமானங்கள்... எண்மர் உயிரிழப்பு...



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இரண்டு சிறிய ரக விமானங்கள் நடு வானில் நேருக்கு நேர் மோதி ஏரியில் விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் இடஹோ மாகாணம் ஸ்கூட்னை நகரில் மிகப்பெரிய ஏரி அமைந்துள்ளது. அந்த ஏரிப் பகுதியில் தண்ணீர் மற்றும் நிலம் என இரண்டிலும் தரையிறங்கும் வடிவமைப்பைக் கொண்ட சிறிய ரக விமானங்கள் அதிக அளவில் பயணங்களை மேற் கொண்டு வந்தன.

இந்நிலையில், அந்த ஏரி பகுதியின் வான் பரப்பில் நேற்று முன் தினம் பறந்து கொண்டிருந்த இரண்டு சிறிய ரக விமா னங்கள் சுமார் 900 அடி உயரத்தில் நடு வானில் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர்

## சிறுமி எரித்துக்கொலை விசாரணைகள் ஆரம்பம்

(சோமரசம்பேட்டை)

திருச்சியில் 14 வயது சிறுமி எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் விசாரணையை தொடங்கியது.

திருச்சி மாவட்டம், சோமரசம்பேட்டை அதவத்தூர் பாளையம் பகுதியை சேர்ந்தவர் பெரியசாமி விவசாயி. இவருடைய மகள் கங்காதேவி (வயது 14). இவர், எட்டரை அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்து வந்தார். அந்த மாணவி நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் சக தோழிகளுடன் விளையாடச் சென்றிருந்தாள்.

பின்னர் வீட்டுக்குச்சென்ற அவள், வீட்டில் உள்ள குப்பைகளை எடுத்துக் கொண்டு முள்காட்டில் கொட்டச் சென்றாள். அதன்பிறகு மாலை வரை வீடு திரும்பவில்லை.

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் முறையின் சீர்திருத்தங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உள்ளூராடசி சபைகள் அமைப்பு நிறுவப்படுவதற்கு முன்னர் நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் (மாநகர சபைகள், நகரசபைகள், பட்டின சபைகள் மற்றும் கிராமச் சபைகள் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1946 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறை செயற்படுத்தப்பட்டது. வட்டாரத் தேர்தல் முறை கிட்டத்தட்ட தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் முறையை ஓரளவு ஒத்தது.

இந்த நடைமுறையில், உள்ளூராட்சி சபைகளின் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் உள்ளூராட்சி சபைகளின் தலைமையகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன வேட்பாளர்களாக வேட்பு மனுக்களை சமர்ப்பிக்க முடிந்தது. வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு முடிந்தவுடன் உடனேயே அதே இடத்தில் வாக்குகளை எண்ணும் முறை இருந்தது. ஒரு பிரதிநிதியின் இடம் காலியிடமாக இருந்தால், அத்தகைய காலியிடத்தை நிரப்ப ஒரு இடைத் தேர்தல் நடைபெற்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதல் கூட்டத்தில் மேயர்/ துணை மேயர்/ தலைவர்/ துணைத் தலைவர் போன்றோர் உறுப்பினர்களின வாக்குகளின் பெரும்பான்மையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்த முறை உள்ளூராட்சி சபைகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தால் ரத்து செய்யப்பட்டு, விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பிரதேச சபை, நகர சபை, மாநகர சபைக்குரிய குறித்தொதுக்கப்பட்ட மொத்த அங்கத்தவர்கள் மொத்தமாக ஒரு கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு வாக்களிப்பதன் மூலம் தேர்வு செய்யப்படுவர். கட்சிக்கு அல்லது குழுவுக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறையில் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இவர்களில் சபைக்குரிய தலைவர், துணைத் தலைவர் என்போர் அரசியல் கட்சி/குழுக்களின் செயலாளர்களினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் 4 ஆண்டுகள் அப்பதவியை வகிக்க முடியும். உள்ளூராட்சி அமைச்சு விரும்பின் மேலும் ஒரு வருடத்திற்கு தேர்தலை ஒத்திவைக்க முடியும். இது பற்றி அடுத்த கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

உள்ளூராட்சி மன்றங்களில் முறையானதொரு உறுப்புரிமை முறைமை இல்லாதிருந்த காரணத்தினாலும், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மற்றும் கிராமோதய சபைகளினால் குறித்த விடயங்கள் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பிரதேச சபைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச் சட்டம் 1987.04.16 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் தொடர்பாக பாராளு மன்றத்தில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டபோது, சிறந்ததொரு உள்ளூராட்சி முறையை உருவாக்குவதற்கும், அதற்குரிய உள்ளூராட்சிச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் கிராமங்களிலுள்ள இளைஞர்களின் தலைமைத்துவமும் அவசியமானதாகக் கருதப்பட்டது. பிரதேச சபைகளினூடாக அரசியற் பொறுப்புக்களை ஏற்று நடத்துவதற்குரிய பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கும் நோக்குடன், இவ்வாறான நிறுவனக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதெனக் கூறப்பட்டது.

மொறகொட ஆணைக்குழுவின் பரிந்துரையும் இதன்போது கவனத்திற் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுவதுடன், இதன் பிரகாரம் (பிரதேச செயலாளர்) உப அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் (1980க்கு முன்னர்) செயற்படுத்தப்பட்ட கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகள் ஆகிய இரண்டும் ஒரே பிரிவின் கீழ் அமையுமாறு, பிரதேச சபைகள் என்னும் பெயரில் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. மேற் குறித்த கிராம சபைகள், பட்டின சபைகளின் அதிகாரங்கள் யாவும் பிரதேச சபைகளுக்குக் கையளிக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தின் படி இலங்கையில் 4 வகையான உள்ளூராட்சி அமைப்புகள் நிறுவப்பட்டன. அவை: மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் மற்றும் கிராமோதய சபைகள் என்பனவாகும்.

கிராமோதய சபைகளுக்கான அங்கத்தவர் தெரிவு பொது மக்களின் வாக்கெடுப்பின் மூலமாக நடத்தப்படுவதில்லை. குறித்த கிராமசேவகர் பிரிவில் கிராம சேவகரால் நடத்தப்படும் கூட்டத்தில் இதன் அங்கத்தவர்கள் ஓராண்டுக்கொரு முறை தெரிவு செய்யப்படுவர். அநேகமாக குறித்த கிராமோதயப் பிரிவில் காணப்படும் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை இயக்கங்களின் தலைவர்களே அங்கத்துவம் வகிப்பர். பொதுவாக மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என்பனவே உள்ளூராட்சி சபைகள் என அழைக்கப்படுகின்றன.

1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாட்டில் 258 பிரதேச சபைகள் இயங்கின. 1995 ஆம் ஆண்டில் பியாகாமாவிற்காக ஒரு பிரதேச சபை (PS) உருவாக்கப்பட்டது. இது முன்னர் இலங்கை முதலீட்டுச் சபையினால் நிர்வகிக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டில் மொரட்டுவை மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர- கோட்டே நகர சபைகள் (UC) மாநகர சபைகளாக (MC) தரம் உயர்த்தப்பட்டன. 1997 நிலவரப்படி 309 உள்ளூராட்சி சபைகள் (**14MC, 37UC, 258PS**) இருந்தன. முன்னர் இலங்கையின் சில பகுதிகளைத் தவிர அனைத்து பகுதிகளும் உள்ளூராட்சி சபைகளால் நிர்வகிக்கப்பட்டன. கட்டுநாயக்க மற்றும் கொக்கலையில் உள்ள சுதந்திர வர்த்தக வலயங்கள் இலங்கை முதலீட்டுச் சபையினால் நிர்வகிக்கப்பட்டன.

ஜனவரி 2011 இல் உள்ளூராட்சி சபைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இம் மாற்றங்கள் அவற்றின் மொத்த எண்ணிக்கையை 335 ஆக அதிகரித்தது. இரண்டு நகர சபைகள் (UC) மாநகர சபைகளாக (MC) (பண்டாரவளை, அம்பாந்தோட்டை) தரம் உயர்த்தப்பட்டன. ஒரு பிரதேச சபை மாநகர சபையாக (கடுவெல) தரம் உயர்த்தப்பட்டது. ஒரு பிரதேச சபை நகர சபைக்கு (ஏறாவூர்) தரம் உயர்த்தப்பட்டது. இரண்டு புதிய மாநகர சபைகள் (அக்கரைப்பற்று, தம்புள்ளை) உருவாக்கப்பட்டன மற்றும் இரண்டு புதிய பிரதேச சபைகள் (லுனுகலை, நாரம்மலை) உருவாக்கப்பட்டன.

பண்டாரகம பிரதேச சபையின் சில பகுதிகளிலிருந்து மில்லனியா பிரதேச சபை 2012 ஒக்டோபரில் உருவாக்கப்பட்டது. தம்மன்கடுவ பிரதேச சபை டிசெம்பர் 2016 இல் பொலநறுவை மாநகரசபை மற்றும் பொலநறுவை பிரதேச சபை எனப் பிரிக்கப்பட்டது. நவம்பர் 2017 இல் அம்பகமுவா பிரதேச சபையின் சில பகுதிகளிலிருந்து மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் நோர்வூட் பிரதேச சபை ஆகியவை உருவாக்கப்பட்டன. அக்கரப்பத்தனை பிரதேச சபை மற்றும் கொட்டகலை பிரதேச சபை ஆகியவை நுவரெலியா பிரதேச சபையின் சில பகுதிகளிலிருந்து உருவாக்கப்பட்டன. நவம்பர் 2017 நிலவரப்படி 341 உள்ளூராட்சி அதிகாரிகள் (24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள்) இருந்தன.

### உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள்

உள்ளூராட்சி சபைகள் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் கீழ் உடைமை அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றிருக்கும். மாநகரசபைகளும், நகரசபைகளும் முறையே மாநகர சபைகள் சட்டம் நகரசபைகள் சட்டம் ஆகியவற்றால் உடைமை அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றிருக்கும். பிரதேச சபைகள் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் கீழ் உடைமை அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றிருக்கும். மாகாண சபைகளாவன, உள்ளூராட்சி சபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கலாமே அன்றி அவற்றின் அதிகாரங்களை நீக்கமுடியாது. நடைமுறையில் இருக்கும் கிராமோதய மண்டலய சட்டத்தினால் அவற்றிற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை விட மாகாண சபைகள் மேலதிக அதிகாரங்களை வழங்க முடியும்.

பின்வரும் அட்டவணையை அவதானிப்பதன் மூலம் இப்போது இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி சபைகள் பற்றிய விபரங்களை அறியலாம்.

| உள்ளூராட்சி சபைகள் | தற்போதுள்ள சட்ட ஏற்பாடு |
|---|---|
| மாநகர சபை | 1988இல் மாநகர சபைகள் திருத்தச் சட்டமூலம் |
| நகர சபை | 1988இல் நகர சபைகள் திருத்தச் சட்டமூலம் |
| பிரதேச சபை | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் |

### உள்ளூராட்சி சபைகளைத் தாபித்தல்

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை வரையறுத்து அமைக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளைத் தீர்மானித்தல், அதற்கு உத்தியோகப் பெயர் ஒன்றை வழங்குதல், வர்த்தமானியில் பிரகடனப்படுத்துதல், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் ஆகியன மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சி சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சரால் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் போது பின்வரும் விடயங்கள் மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது. அவையாவன பிரதேசத்தில் வாழும் மக்கள் தொகை, பிரதேச நிலப்பரப்பு அளவு, பிரதேசத்தின் தரைத்தோற்ற இயல்பு, பிரதேசத்தின் அபிவிருத்தி மட்டம், பிரதேசத்திலுள்ள வசதி வாய்ப்புக்கள், நகரசபை அல்லது மாநகர சபையாயின் அப்பிரதேசம் நாகரிகமடைந்துள்ள விதம் என்பனவாகும்.

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய நிறுவப்பட்டுள்ள பிரதேச சபைகளின் நிர்வாக எல்லையானது கிட்டத்தட்ட "பிரதேச செயலகங்களின்" எல்லைகளுக்குச் சமனானதாகும். ஒரு குறித்த பிரதேசத்தினுள் ஒரு மாநகரசபையோ அல்லது ஒரு நகரசபையோ செயற்படுமாயின் அதன் (மாநகரசபை, நகரசபை) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த எஞ்சியுள்ள பிரதேசம் பிரதேச சபையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றது. உதாரணமாக தென்மராட்சிப் பிரதேச செயலகமானது 60 கிராம சேவகர் பிரிவுகளையும் 130 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது. மேலும் இப்பிரதேசம் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை என்ற இரு உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கியுள்ளது. இதில் சாவகச்சேரி நகரசபை 11 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி 31.29 சதுர கி.மீ பரப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. மிகுதி 49 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட 200.90 சதுர கி.மீ பரப்பு சாவகச்சேரி பிரதேச சபைக்குள் அடங்குகிறது.

(தொடரும்...)

# இராசிபலன்

08.07.2020
ஆனி 24, புதன்கிழமை
திருதியை முற்பகல் 10.36 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 2.59 மணிவரை
சுபநேரம் 4.28-5.58 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை
சந்திராஷ்டமம் பூசம்
சாங்கடஹர சதுர்த்தி விரதம் வளவன்


மேஷம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாடு மகத்துவம் தரும்.


கடகம்

வழிபாட்டால் சிந்தை மகிழ்வீர்கள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.


சிம்மம்

சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

எதிர்பார்ப்புக்கள், நிறைவேறும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.


தனுசு

உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலை உயரும் வாய்ப்புண்டு, பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், காரிய அனுகூலமுண்டு.


மகரம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.


கும்பம்

உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மீனம்

வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

உன் உடலை எப்போதும் அன்பு என்னும் ஒளியால் நிரப்பிக் கொண்டேயிரு.



தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய நிர்வாகத்தினரால் ஆலய திருவிழா உபயகாரர்களி னதும் புலம்பெயர்வாழ் உறவுகளினதும் நிதிப்பங்களிப்பில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொரோனா தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக ஒரு தொகைப் பணம் ஆலய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டது.

# விமானப்படையினரை தாக்கிய இரு இளைஞர்கள் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தள படையினர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தினைச் சேர்ந்த இரண்டு விமானப்படையினர் நேற்று முன்தினம் மாலை சூரிபுரம் பகுதியில் பாதுகாப்பு கடமைகள் நிமித்தம் கிராமத்திற்குள் சென்றபோது அங்கு கூடி நின்ற இளைஞர்களுக்கும் விமானப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இளைஞர்கள் சிலர் இரண்டு விமானப்படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இதன்போது காயமடைந்த விமானப்படை வீரர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவத்தினை தொடர்ந்து முள்ளியவளை பொலிஸார் விமானப்படையினர் மீது தாக்குதல் நடத்திய இளைஞர்கள் இருவரை கைது செய்துள்ளனர். (4-5-281)

# யாழ். மாவட்ட வாக்காளர்களுக்கு அ.அட்டை தொடர்பான அறிவித்தல்




(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தமக்குரிய தேசிய அடையாள அட்டை விண்ணப்பத்தினை கிராம உத்தியோகத்தர் ஊடாக உடனடியாக விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் விதிமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது. இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் 2019 ஆம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்பு பயன்படுத்தப்படவுள்ளது. அத்தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளவர்கள் இம்முமுறை தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிமை உள்ளவர்கள்.

அதேபோல், தேர்தலில் வாக்களிப்பதற்கு சமுகமளிக்கும் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளத்தைச் சமர்ப்பித்து வாக்களிக்க முடியும். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளமாக அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் மதகுருமாருக்கு என வழங்கப்பட்ட அடையாள அட்டை, சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற முதியோர் அடையாள அட்டை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தகைய எந்தவொரு ஆவணமும் இல்லாத ஒருவர் தற்காலிகமாக தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையை பயன்படுத்தி வாக்களிக்க முடியும்.

ஜுலை மாதம் 17 ஆம் திகதி வரைக்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தினுடைய தரவுத்தளத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக உட்சேர்க்கப்பட்ட சகல தேசிய அடையாள அட்டை விண்ணப்பதாரர்களுக்கும் அடையாள அட்டை தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்கு உரிய விசேட நடவடிக்கையினை ஆட்பதிவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

அதேபோல், 2020 ஜுலை மாதம் 29 ஆம் திகதி வரைக்கும் ஆட்பதிவுத் திணைக்கள தரவுத்தளத்தில் உட்சேர்க்கப்படுகின்ற தகவல்களைக் கொண்டு உறுதிப்படுத்திய கடிதத்தினை தேர்தலுக்கு முன்னர் விநியோகிப்பதற்கும் ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே தேசிய அடையாள அட்டை இல்லாத அனைத்து வாக்காளர்களும் எதிர்வரும் ஜுலை 29 ஆம் திகதிக்கு முன்னர் அடையாள அட்டைக்குரிய விண்ணப்பத்தினை ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி தங்களுக்குரிய ஆள் அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலகுவாக வாக்காளர்கள் வாக்களிப்பினை மேற்கொள்ள நாம் முயற்சிக்கின்றோம்" என மேலும் தெரிவித்தார். (4-5-101)


## 31 ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 10.12.1955
மறைவு 08.06.2020

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களான சாந்தநாயகி-நடேசபிள்ளையின் சகோதரனும் தியாகினி - சந்திர மோகனின் மாமனாருமான
**அமரர் செல்லத்துரை தங்கராசா**
அவர்கள் காலமானார்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/பளை மத்திய கல்லூரி,
ஆசிரிய நலன்புரிச் சங்கம்.
(3194)

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும் க.பொ.த.சா/தரம் விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் மாதிரி வினாத்தாள்

நேரம்: 3 மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01-02

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) நீர்ப்பாசனத்துறைக்கு பெரும் தொண்டாற்றியதன் காரணமாக மக்களால் தெய்வம் எனப் போற்றப்பட்ட மன்னன்.
1. மகாபராக்கிரமபாகு
2. தாதுசேனன்
3. வசபன்
4. மகாசேனன்

2) பதியமுறை இனப்பெருக்கத்தில் தண்டு முகிழ் நடுகைப்பொருளாகப் பயன்படுத் தப்படும் தாவரம்
1. வெங்காயம்
2. அன்னாசி
3. உருளைக்கிழங்கு
4. மஞ்சள்

3) சோளம்,நெல்,குரக்கன்,இறுங்கு,தினை,கோதுமை என்பன அடங்கிய பயிர்க்குடும்பம்.
1. பொயேசியே
2. பபேசியே
3. சொலனேசியே
4. குக்குபிற்றேசியே



4) படத்தில் காட்டப்படுருப்பது
1. அரும்பொட்டு
2. கிளையொட்டு
3. அணையொட்டு
4. ஆப்பொட்டு

5) இலங்கையில் 1750mm-2500mm வருடாந்த சராசரி மழையைப் பெறும் வலயம்.
1. உலர் வலயம்
2. ஈரவலயம்
3. இடைவலயம்
4. வறள் வலயம்

6) புதிய பாகுபாட்டின்படி இலங்கையில் காணப்படும் விவசாய சூழலியல் வலயங்களின் மொத்த எண்ணிக்கை.
1) 10
2) 15
3) 24
4) 46

7) ஒக்டோபர்-நவம்பர் காலப்பகுதியில் இலங்கைக்கு கிடைக்கும் பிரதான மழை வீழ்ச்சி அழைக்கப்படுவது.
1. இரண்டாம் இடைப்பருவ மழை
2. வடகீழ்ப் பருவ மழை
3. தென்மேல் பருவ மழை
4. முதலாம் இடைப்பருவ மழை

8) பின்வருவனவற்றுள் பயிர்செய்கைக்கு உகந்த மண்ணின் ஈரலிப்பு மட்டம்
1. நிரம்பல் நிலை
2. வயற் கொள்ளளவு நிலை
3. தற்காலிகவாடல் நிலை
4. நிரந்தரவாடல் நிலை

9) ஒரு நாளில் சூரிய ஒளி நிலவிய கால அளவை அளவிடப் பயன்படுத்தப்படும் கருவியின்பெயர்.
1. வெப்பமானி
2. சூரிய ஒளிர்வு மானி
3. ஈர-உலர் குமிழ் வெப்பமானி
4. அனிலமானி

10) மாபிள்,நைஸ் என்பன
1. மண் வகைகள் ஆகும்
2. அடையற் பாறைகள் ஆகும்
3. உருமாறிய பாறைகள் ஆகும்
4. தீப்பாறைகள் ஆகும்

11) மண்ணின் இரசாயன இயல்பினைக் குறிப்பது
1. கற்றயன் மாற்றீடு
2. மண் கட்டமைப்பு
3. மண்ணின் நிறம்
4. மண் இழையமைப்பு

12) வர்த்தக ரீதியில் விற்பனை செய்வதற்காக மிளகாய்க் கன்றுகளை உற்பத்தி செய்யப் பொருத்தமான நாற்று மேடை வகை எது.
1. தாழ் நாற்றுமேடை
2. உயர் நாற்றுமேடை
3. ஸ்பொன்ச் நாற்றுமேடை
4. சாடி நாற்றுமேடை

13) மண் வளி அவசியமானது
1. தாவரங்கள் நீரை அகத்துறுஞ்ச
2. வித்து முளைத்தலுக்கு
3. வேரின் ஒளித் தொகுப்புக்கு
4. நீர் பற்றும் திறனை அதிகரிப்பதற்கு


14) ஐதுத்தீன் பற்றிய சரியான கூற்று
1. 18 வீதத்திலும் குறைந்தளவு பண்படுத்தாத(கரட்டு) நார் கொண்டது
2. அரிசித்தவிடு, சோளம், பிண்ணாக்கு என்பன பிரதான ஐதுத்தீன்களாகும்
3. 18 வீதத்திலும் கூடியளவு பண்படுத்தப்படாத(கரட்டு) நார் கொண்டது
4. அசையூண் விலங்குகளால் சமிக்கச்செய்ய முடியாத உணவுகளாகும்

15) மண்ணுக்கு சுண்ணாம்புப் பதார்த்தங்கள் இடுவதற்கான காரணம்
1. காரத்தன்மையை நீக்க
2. அமிலத்தன்மையை நீக்க
3. நுண்ணங்கிகளை அழிக்க
4. கற்றயன் பரிமாற்றத்தை அதிகரிக்க

16) புடோல்,பீர்க்கு,பாகல் ஆகியவற்றின் காய்கள், பழங்களை துளைத்து சேதமேற் படுத்தும் பரென்னிறமான பூச்சி எது.
1. நெல் மூட்டுப் பூச்சி
2. சந்துகுத்தி
3. குக்கர்பிற்றே ஈ
4. அவுலக்கபோரா

17) பயிர்ச்செய்கையின்போது மண்ணிலிருந்து அகற்றப்படும் பிரதான மா போசணைகளில் ஒன்று
1. Fe 2. C
3. N 4. Cu

18) படத்திற் காட்டப்பட்டிருக்கும் கோழிக்குஞ்சுகளுக்கான குஞ்சுவதி பற்றிய சரியான கூற்று
1. சீரான வெப்பநிலை காணப்படுகிறது
2. அதிக வெப்பநிலை காணப்படுகிறது
3. குறைந்த வெப்பநிலை காணப்படுகிறது
4. அதிக குளிர் காணப்படுகிறது



19) சினைப்படுத்தப்பட்ட பாற்பசுவொன்றின் வற்றுப்பசுக் [illegible] ள்.
1) 60 நாட்கள்
2) 305 நாட்கள்
3) 150 நாட்கள்
4) 10 நாட்கள்

20) கோழிக் குஞ்சுகளில் செந்நிறக் கழிச்சல் அவதானிக்கப்பட்டது.அவை சோர்ந்து காணப்பட்டன.பெரும்பாலும் இந்நோயாக இருக்கக்கூடியது.
1. புல்லோரம்
2. கம்போரா
3. கொக்சிடியோசிஸ்
4. ரணிகெட்

21) நிலி ரவி,சூர்த்தி,மூரா ஆகியன
1. கோழியினங்கள் ஆகும்
2. ஆட்டினங்கள் ஆகும்.
3. எருமையினங்கள் ஆகும்
4. பசுவர்க்கங்கள் ஆகும்

22) வயலில் பீடைநாசினிப் பிரயோகம் தொடர்பான **தவறான** கூற்று எது.
1. காற்று வீசும் திசைக்கு செங்குத்தாக விசிறல்
2. உரிய கால இடை வெளியில் விசிறுதல்
3. காற்று வீசும் திசைக்கு எதிராக விசிறல்
4. சிபார்சு செய்யப்பட்ட செறிவில் கலத்தல்

23) படத்தில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசன முறை அழைக்கப்படுவது
1. குட நீர்ப்பாசனம்
2. துளி நீர்ப்பாசனம்
3. பாத்திப்பாசனம்
4. வரம்பு சால்பாசனம்



24) மண்ணின்றிப் பயிர்ச்செய்கையில் தொங்கவிடப்பட்ட உறையை நிரப்பப் பயன்படுத்தக்கூடிய சிறந்த ஊடகம்
1. அல்பேர்ட் கரைசல்
2. தென்னந்தும்பு(தும்புச்சோறு)
3. போடோக் கலவை
4. மணல்

25) புடோல் , பீர்க்கு, பூசணி போன்ற வித்துக்களை நாற்று மேடையில் நட்டு கன்றுகளைப்பெற பொருத்தமான நாற்றுமேடை
1. டபொக் நாற்றுமேடை
2. மணல் நாற்றுமேடை
3. பாத்தி நாற்றுமேடை
4. நெரிடோகோ நாற்றுமேடை

26) தெங்குப் பயிர்களின் கீழ் மிளகு பயிரிடல் எவ்வகைப் பயிர்ச்செய்கையாகும்.
1. அஞ்சற்பயிர்ச் செய்கை
2. இடைப்பயிர்ச்செய்கை
3. ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை
4. கலப்புப் பயிர்ச் செய்கை

27) தயிர், யோகட்,சீஸ் என்பன நற்காப்புச் செய்யப்படும் முறை அழைக்கப்படுவது
1. நொதித்தல்
2. புகையூட்டல்
3. செறிவாக்கல்
4. உலர்த்தல்

28) மண் மேற்பரப்பிலிருந்து தாய்ப்பாறை வரையான தூரம் அழைக்கப்படுவது
1.மண் நிறமென
2.மண் அமிலத்தன்மை என
3.மண் காரத்தன்மை என
4.மண் ஆழமென

29) தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான அளவில் தரமான உணவுகளைப் பெறக்கூடிய ஆற்றல் அழைக்கப்படுவது
1. உணவுக்காப்பு என
2. உணவின் கிடைப்புத் தன்மை என
3. அணுகத்தகு ஆற்றல் என
4. கிடைத்தல் என

30) சகல பயிர்களையும் பயிரிடப் பொருத்தமான $P^H$ வீச்சு எது.
1) 5.5-8.2
2) 6.6-7.2
3) 4.5-6.5
4) 7.3-8.3

31) எல்லா வகையான நெற்பயிர்களினதும் முதிர்ச்சி அவத்தை நாட்களில்
1) 20 நாட்கள்
2) 25 நாட்கள்
3) 30 நாட்கள்
4) 45 நாட்கள்

32) இலங்கையின் உலர்வலயத்தில் பரந்து காணப்படும் மண் வகை
1.செம்மஞ்சள் பொட்சோல் மண்
2.அலுவியல் மண்
3.செங்கபில மண்
4.லற்றசோல் மண்


33) வித்துக்களின் உறங்குநிலை எனப்படுவது
1. வாழ்தகவுள்ள வித்துகளுக்கு முளைத்தலுக்கு அவசியமான காரணி களையும் வழங்கியும் முளைக்காது இருத்தலாகும்
2. வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகளை வழங்கியும் முளை க்காத வித்துக்களாகும்
3. இறந்த வித்துக்களுக்கு முளைத்தலுக்கு அவசியமான காரணிகளை வழங்கியும் முளைக்காத வித்துக்களாகும்
4. பதர் வித்துக்களுக்கு முளைப்பதற்கு அவசியமான காரணிகளை வழங் கியும் முளைக்காத வித்துக்களாகும்

34) மரவரி வளையமாக அகற்றப்பட்டு பெருக்கிக் கொள்ளப்படும் இனப் பெருக்க முறை
1. பதிவைத்தல்
2. கிளைஒட்டுதல்
3. இழைய வளர்ப்பு
4. அரும்பொட்டு

35) அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களில் ஒன்று
1.உரிய முதிர்ச்சியில் அறுவடை செய்தல்
2.பொருத்தமான பயிர்களைக் தெரிவு செய்தல்
3.தரமான நடுகைப் பொருட்களைப் பயன்படுத்தல்
4.முறையான பசளைப் பிரயோகம்

36) சோடியம் மெற்றா சல்பேற்று(SMS),பொட்டாசியம் மெற்றா சல்பேற் (KMS) என்பன
1. உணவு நற்காப்பிகளாகும்
2. உணவு சுவையூட்டிகளாகும்
3. உணவுதொற்று நீக்கிகளாகும்
4.கிருமிகொல்லிகளாகும்.

37) படத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்பு அழைக்கப்படுவது
1.எலிப்பொறி என
2.பெரோமோன் பொறி என
3.உறுஞ்சு குழாய் என
4.பூச்சிப் பொறி என




38) இலை சுருளல்,இலை நரம்பு புடைத்தல்,கொத்து முனை ஆகிய நோய்களின் நோயாக்கி
1.வைரஸ்
2.பங்கசு
3.பற்றீரியா
4.நெமற்றோட்

39) மேல் நாட்டு ஈரவலயத்தில் வளர்க்கப் பொருத்தமான அதிக பாலைத் தரும் கறவைப் பசு வர்க்கங்கள்
1. சிந்தி,சகிவால்
2. பிரிசியன்,அயர்சயர்
3. நிலிரவி,சூர்த்தி
4. சாணன்,ஜமுனாபாறி

40) பால் தரும் பசுக்களின் மடி வீங்கிச் சிவந்து காணப்பட்டதுடன்,பாலின் நிறம் மாறிக் காணப்பட்டது.இந்நோய்
1. கால்வாய் நோய்
2. தொண்டை அடைப்பான்
3. மடியழற்சி
4.பாற் காய்ச்சல்

## பகுதி II

01. i. இலங்கையில் புராதன காலத்தில் இருந்தே வியத்தகு விவசாய தொழில்நுட்ப முறை காணப்படுகிறது. இவ்வாறான அமைப்புக்கள் அநுராதபுரத்தில் அமைந் துள்ளன.
(a) அவ்வாறான கட்டமைப்பு ஒன்றைப் பெயரிடுக?
(b) பசுமைப் புரட்சியின் பிரதான நோக்கங்கள் இரண்டு தருக ?
ii. (a)இலங்கையில் பாலை நற்காப்புச்செய்யும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக?
(b) உணவு பொதியிடலின் முக்கியத்துவங்கள் இரண்டினை குறிப்பிடுக ?
iii. (a)தண்டுத் துண்டங்களை விரைவாக வேர் விடத் தூண்டும் பதார்த்தங்கள் 3இனைத் தருக ?
(b) வித்து முளைத்தலுக்கு அவசிமான புறக் காரணிகளைத் தருக?
iv .a) மண்ணில் நிலவும் மண்ணீர் வகைகள் மூன்றினையும் தருக ?
b) இவற்றுள் தாவரங்களினால் இலகுவாகப் பெறக்கூடிய மண்ணீர் வகை எது?
c) மண் வளியின் பயன்கள் 2 தருக?
v. a) மாடுகளுக்கு ஏற்படும் கால்வாய் நோய்க்கான நோய் காரணியைத் தருக?
b) இந்நோய்க்கான நோயறிகுறிகள் 2 தருக?
vi. a) இலங்கையில் இறக்குமதி செய்து பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ள களை நாசினி வகை ஒன்றைத் தருக.?
b)களைநாசினி தொழிற்படும் தன்மைக்கு அமைய நிலக்கீழ்த் தண்டைக் கொண்ட களைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் மிகப் பொருத்தமான களை நாசினி வகை எது?
vii. a) பிரித்தானிய கோழி வர்க்கங்கள் இரண்டினைத் தருக?
b) மடியழற்சி நோயினைக் கண்டறியப் பயன்படும் கருவியின் பெயரைத் தருக?
viii..a) இலங்கைக்கு மழை கிடைக்கும் பிரதான வழிகள் யாவை?
b). பிரதான பயிப் போகங்களையும் அவை மேற்கொள்ளப்படும் மாதங்களையும் தருக?
xi.a).நைதரசனை அதிகளவில் கொண்ட இரசாயனப் பசளை வகை ஒன்றைத் தருக?
b.உணவுக் கலப்படம் நடைபெறும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
x) a. நாற்றுமேடையை தொற்றுநீக்கும் வெவ்வேறு முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
b) நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி நாற்காப்பு செய்யும் பால் உற்பத்திகள் 2 தருக?
c) ஆளுகை இல்லங்களில் பயிரிப்படும் பயிர் வகைகள் இரண்டு தருக?.

02. விவசாயத்தில் பயிர்களைப் பாகுபடுத்தல் பல்வேறு நன்மைகளைத் தருகின்றன.
i) விவசாயத்தில் பயிர் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?
ii) பிரதான தாவரக் குடும்பங்கள் 4 இனை குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் குறைந்தது மூன்று உதாரணங்கள் தருக?
iii) விஞ்ஞான ரீதியான பயிர்ப்பாகுபாட்டில் பயன்படுத்தப்படும் இரு சொற்பெயரீட்டின் இரு பகுதிகளையும் தருக?

03)பயிர்ச் செய்கையில் பண்டைய காலம் தொட்டு இன்று வரை புராதன, நவீன விவசாயமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன.
i) இலங்கையின் உலர் வலயத்தில் ஆதி காலம் முதல் மழை நீரை மட்டும் நம்பி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பயிர்ச் செய்கை முறையைத் தருக?
ii)a. அதன் அனுகூலம், பிரதி கூலம் இவ்விரண்டு தருக?
b) சுழற்சி முறை பயிர்ச் செய்கையில் மேற்கொள்ளப்படும் நான் மடிய சுழற்சி முறையினையும், பயிரிடப்படும் பயிர் வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக?
c) வீதிப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவங்கள் மூன்றினைத் தருக?

04) தாவரங்களை பெருக்கிக் கொள்ள இனப் பெருக்கமுறை பயன்படுத்தப் படுகின்றது.
i) a) வித்து உறங்குநிலைக்கான காரணங்கள் நான்கு தருக?
b). தரைக்கீழ் முளைத்தலைக் காட்டும் வித்துக்கள்,தரைமேல் முளைத்தலைக் காட்டும் வித்துகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக?
ii) நடுகைக்கு உகந்த வித்துக்கள் கொண்டுள்ள இயல்புகள் நான்கு தருக?
b) வித்து முளை திறனை துணியும் முறைகள் இரண்டினை தருக?

iii.a) முதிர்ச்சி நிலைமைக்கமைய தண்டுத்துண்டங்களை வகைப்படுத்தி உதாரணம் தருக?
b) இயற்கை பதிமுறை இனப் பெருக்க முறைகள் நான்கை உதாரணத்துடன் குறிப்பிடுக?
c.ஆப்பொட்டு முறையினை படம் வரைந்து பெயரிடுக?

05) பொருளாதார ரீதியில் நட்டத்தை ஏற்படுத்தும் காரணிகளாக பீடைகள் காணப்படுகின்றன.
i) நோய் முக்கோணியை வரைந்து அதன் கூறுகளை விபரிக்குக?
ii) பங்கசு நோய் ஒன்றையும் , பக்றீரியா நோய் ஒன்றையும் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றின
a) நோய்க் காரணி
b) நோய் அறிகுறிகள்
c) நோய்க்கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக
iii. பழுதடைந்த உணவிற்கான இயல்புகள் 4 தருக

06. பயிர்ச் செய்கைக்கு நிலம் பண்படுத்தல் இன்றியமையாததாகும்.
i) நிலம் பண்படுத்தல் என்றால் என்ன?
ii) a) ஆரம்ப நிலப் பண்படுத்தலின் நோக்கங்களை தருக?
b) பயிர்ச்செய்கைக்கென பயன்படுத்தப்படும் பாத்தி வகைகள் யாவை?
iii) மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விபரிக்க?

07) பண்ணையில் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி விலங்கு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் முறையான முகாமை இல்லாமையால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
i)a)இலங்கையில் காணப்படும் கால்நடை வளர்ப்புக்கான வாய்ப்புக்கள் 5 தருக?
b) பயிர் நிலத்திலிருந்து மேலதிக நீரை வெளியேற்றும் வடிகால் தொகுதிகளை படம் வரைந்து விளக்குக?
ii.a) வெவ்வேறு கோழி வளர்ப்பு முறைகளைப் பெயரிடுக?
b) கனகூள வளர்ப்பின் அனுகூலங்கள் , பிரதி கூலங்கள் இவ்விரண்டினைத் தருக?
iii..புரதப் போசணைக் குறைபாட்டு நோய்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**மேலதிக பயிற்சிக்காக**
08.i) மண்ணரிப்பு காரணிகள் யாவை?
ii) மண்ணரிப்பினால் ஏற்படும் தீய விளைவுகள் 4 தருக?
iii)a) கார மண்ணைத் திருத்துவதற்கு இடப்படும் பதார்த்தமொன்றைத் தருக?
b)பொசுபரசு குறைபாட்டு அறிகுறிகள் இரண்டு தருக?
c)கூட்டெரு தயாரிப்பு முறையினை விபரிக்குக?

9)i.அதிக உடற்பருமனுள்ள நபருக்கு ஏற்படும் பிரச்சினைகள் யாவை?
ii.பயிர்ச்செய்கை நிலத்துக்கு புதிதாக களைகள் வந்து சேர்வதை தடுக்கும் முறைகள் யாவை.
iii.உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் இரசாயனக் காரணிகள் யாவை.

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும் க.பொ.த.சா/தரம் விஞ்ஞானம் மாதிரி வினாத்தாள் விடைகள்

1) A 1 மீன்
2) பண்டைய இலங்கை போல அரிசியில் தன்னிறைவு பெறல் / அரிசியை ஏற்றுமதி செய்தல்/ செயற்கையை விடுத்து இயற்கையான இனத்தைப் பயிரிடுதல் (சூழல்நேயமானது) / இயற்கையுடன் ஒன்றித்தது / சூழற் சமநிலையைப் பாதிக்காது / தொற்றும் / தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பளித்தல் / நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குதல் / புதிய பிரச்சினைகள் / நோய்கள் எழுவதைத் தடுத்தல் / திடமான வாழ்விற்கு உதவும் / போசணை / சுகாதாரம் / தொழில் நுட்பம் (யாதாயினும் ஒன்றைக்குறிப்பிடல்) சிறப்பானது (பிரச்சினையற்றது) / உடல் நலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தாது / சுவையானது / பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறு உள்ளது / ஆரோக்கிய வாழ்வுக்கு உகந்தது / ஆய்வுகள் சிறப்பானதெனக் கூறியுள்ளன.

3) உற்பத்தியாக்கி
4) குடித்தொகை வளர்ச்சி வரைபு / கோலம்
5) 3ம் போசணை மட்டம்
6) நீண்டகாலம் அழிவடையாது / இலகுவில் சிதைவடையாது / அங்கிகளினூடாக / உணவுத் தொடர்பினூடாக அசையக் கூடியது / கொழுப்புக்களைக் கரைக்கும்/ உயிர்ப்பான உயிரிரசாயனப் பதார்த்தமாக மாறும்.
7) தோற்றப்பாடு :- அல்கா மலர்ச்சி / நற்போசணையாக்கம்
பாதிப்பு :- நீர் (மாடைந்து) பயன்படுத்த முடியாத (நுகர்வுக்கு உகப்பற்ற) நிலையை அடையும்/ துர்நாற்றம்/, நீரின் ஒளிஊடுபுகவிடும் தன்மை (கலங்கல் நிலையை அடைதல்) அற்றுப்போதல்/ சுத்திகரிக்க மேலதிக செலவு / காலவிரயத்தை ஏற்படுத்தும்/ நோயை ஏற்படுத்தும்/ சிறுநீரகப் பாதிப்பு
8) பொலநறுவை

B 1 (பாயும்) நீர்
2 a D
b நீர்மின்னுற்பத்தி/ சுவட்டெரிபொருட் பாவனை குறைக்கப்படுதல்
c பூகோள வெப்பம் அதிகரித்தல்/ பச்சைவீட்டு விளைவு அதிகரித்தல்


C 1 (ஊடகமாகக்) கொங்கிறீற் பயன்படுத்தப்பட்டிருத்தல்/ அணைக்கட்டின் அடிப்பகுதி அகலமாகவும் மேற்பகுதி/ மேலே செல்லச் செல்ல ஒடுக்கமாகவும்) (அகலம் குறைவாக)அமைக்கப்பட்டிருத்தல்

2 வெள்ளப்பெருக்கு/ காடழிப்பு/ சூழற் சமநிலைக் குழப்பம்/ வனவிலங்குகளின் வாழிட இழப்பு/ கழிவகற்றல் முறைகளால் வரும் பிரசிசினைகள்/ இயற்கைச் சூழல் பாதிக்கப்படுதல்/ சுகாதாரச் சீர்கேடுகள்/ நோய்கள்/ உயிர்ப் பல்வகைமை இழப்பு/ மழைவீழ்ச்சிக் கோலத்தில் மாற்றம்

2 A 1 பிளான்ரே
2 சைக்கஸ்/ மடுப்பனை/ பைனஸ்
3 ஈரலிப்பான/ நிழலான/ குறைந்த சூரிய ஒளி கொண்ட/ தரைச் சூழல்
4 C/ F, G (C இல்லாது F, G எழுதப்பட்டிருப்பின் கட்டாயமாக இரு எழுத்துக்களும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்)
5 F :- சமாந்தர நரம்பமைப்பு
G :- வலையுரு நரம்பமைப்பு

6 G/ இருவித்திலைத் தாவரங்கள
B 1 P :- கரு
Q :- கலச்சுவர்
2 மேடை
3 புடைக்கலவிழையம்
4 செலுலோசு
5 1. உரியை/ இழையத்தை நீருள்ள கடிகாரக் கண்ணாடியுள்/ பெத்திரிக் கிண்ணத்தினுள் இடுதல்
2. தூரிகையின் மூலம் (நீர்த்துளி இடப்பட்ட) வழுக்கியில் உரியை வைத்தல்
3. மூடித்துண்டால் மூடுதல்


3A 1.அணு எண் 11
இலத்திரன் நிலையமைப்பு




2 (வளியுடன், நீருடன்) உக்கிரமாக தாக்கம் அடைவதால்

3.ஒட்சைட்டின் சூத்திரம் - $Na_2O$
ஒட்சைட்டின் இரசாயன இயல்பு :- மூலம்

4




B 1 D/ மின்பகுப்பு
2 A/ காய்ச்சி வடிப்பு
3 இலிபீக்கின் ஒடுக்கி
4 உப்புக்கள்
5.கொதிநிலை உயர்வு/ஆவிப்பறப்புக் குறைவு
6 A





B கிணற்றுநீரில் உப்புக்கள்/ அயன்கள் காணப்படும்
முகவையுட் சேரும் நீரில் உப்புக்கள்/ அயன்கள் காணப்படாது

4 A 1.ஊடகமொன்றின் வழியே/ வெளியிற் செல்லும் குழப்பம் (அலை எனப்படும்)
2. வீச்சம்
3. 2
4. சமன்/ A = h
5. 0.1s இல் அதிர்வு = 2 கணிக்க
1s இல் அதிர்வு = 20(Hz) கணிக்க (அலகு அவசியமில்லை)

6. ஒலி கேட்காது/ குறையும்
7. குறையும்

B 1



டயோட் இனது குறியீடு -
ஒளி அம்புக் குறிகள் மூலம் காட்டப்படுதல் -

2 $X_1$ -ஒளிராது
$X_2$ - ஒளிரும்

3 இருவாயி முன்முகக்கோடலிலுள்ளபோது மின்னோட்டம் பாய இடமளிக்கும்/ முன்முகக்கோடற் தொடுப்பில் மின்னோட்டம் பாயும்.
இருவாயி பின்முகக்கோடலிலுள்ளபோது மின்னோட்டம் பாய இடமளிக்காது/ பின்முகக்கோடற் தொடுப்பில் மின்னோட்டம் பாய்வதில்லை
(இருவாயி ஒரு திசையில் மாத்திரம் ஓட்டத்தைச் செல்ல விடும்/ $X_1$ இனது முனைகள் மாறி இணைக்கப்பட வேண்டும் எனும் விடைகளுக்கு

4 கழிஊதா/ IR (செங்கீழ்)

## பகுதி II - B

5 A 1 மூளை, முண்ணான்
2 சுற்றயல் நரம்புத் தொகுதி
3 உட்காவு/ புலன் நரம்பு, வெளிக்காவு/ இயக்க நரம்பு
4 பரிவு நரம்பு, பரபரிவு நரம்பு
5 பரிவு நரம்பு

B 1 சிறுநீரகத்தி
 2 யூறியா/யூறிக்கமிலம்/கிறியற்றின்/ கிறியற்றினைன்
 3 குருதிப்புரதம், குருதிக்கலங்கள்

4 உட்காவுப்புன்னாடியின் விட்டம் வெளிக்காவுப்புன்னாடியின் விட்டத்தை விடப் பெரியது/மெல்லிய மேலணி இழையத்தாலான போமனின் உறை

C 1 குருதி
 2 (நுரையீரலின்) சிற்றறை
 3 பரவல்
 4 இழைமணி
 5 சக்தியைச் சேமித்தல்/ சக்தியை விடுவித்தல்/ சக்திக் காவியாகத் தொழிற்படல்
 6 காற்றின்றிய சுவாசம்
 7 அஸ்பெஸ்ரோஸ் தூசுக்களை சுவாசிப்பதால் (அஸ்பெஸ்ரோஸிஸ்) நோய் ஏற்படுகிறது. (அதனைத் தடுக்க)

6 A 1 பெத்திரிக் கிண்ணம்
 2 இரும்பு - Fe,
 மக்னீசியம் - Mg

3. பினோப்தலின்/ பொற்றாசியம் பெரி சயனைட்
4. $Fe^{++}$
5. $OH^-$
6. Mg
7. a. $Fe_2O_3$
 b. CO/ காபனோரொட்சைட்
 c. பொன்/ Au

B 1 மஞ்சள்
 2 a. உருகுதல்/ நீலநிறச்சுவாலை/ வெப்பம் வெளிவிடப்படுதல்/ மூக்கை அரிக்கும் மணம்/ மீதி எஞ்சாது
b. வாயு
c. இரசாயனச் சேர்க்கை/ புறவெப்பத் தாக்கம்

3 a. உர வகை தயாரிப்பு/சுயசேமிப்பு மின்கலத்தயாரிப்பு/ சாய உற்பத்தி/பிளாஸ்ரிக் உற்பத்தி/ அழுக்ககற்றி உற்பத்தி /நீரகற்றும் கருவி/ வாயுக்களை உலர வைத்தல்

b
$$C = \frac{n}{v} / \ 1 = \frac{0.2}{v}$$
$$V = 0.2\ (dm^3)$$

c. சேதனச் சேர்வை/ ஐதரோகாபன்
d. ஐசோப்பிரின்
e. C/ காபன்

7. A 1. ஓமின்விதி
 2. சமாந்தரம்
 3. X – வோல்ற் மானி
 Y – அம்பியர் மானி

4. A -மாறும் தடையி/ தடைப்பெறுமானம் தேவையானவாறு மாற்றப்படத்தக்கது
 B – நிலையான தடையி/ தடைப் பெறுமானம் மாற்ற முடியாதது

5. V = IR/ 4.5 = 3 x R
 R = 1.5Ω (அலகுடன் விடைக்கு)

6. a. வாசிப்பு குறையும்/ யாதாயினும் 3 A ஐ விடக் குறைந்த பெறுமானம் கணித்து (கணித்தல் தவறு எனினும்) எடுக்கப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.

 b (தொடரிணைப்பில்) தடை அதிகரித்ததால் (மின்னோட்டம் குறையும்)

B 1. மின்சக்தி வெப்ப சக்தி
 2 ஈருலோகக் கீற்று/ஈருலோகச் சட்டம்
 3



மேல்நோக்கி வளைந்திருத்தல் மாத்திரம் போதுமானது

4 கடத்தல்
5

| மேற்காவுகை | (உலோகச்சட்டத்தில்) கடத்தல் |
|---|---|
| ஊடகத் துணிக்கை அசையும் | ஊடகத் துணிக்கை அசையாது/ அதிரும் |
| திரவ/ வாயு ஊடகத்தில் நிகழும் | திண்ம ஊடகத்தில் நிகழும் |
| வெப்பத்தால் விரிவடைந்து அடர்த்தி குறைவதால் மேலே செல்லும் ஊடகத் துணிக்கை ஓட்டம் மூலம் வெப்பம் இடம்மாற்றப்படும். | அணுக்களின் அதிர்வு/ சுயாதீன இலத்திரன்களின் அசைவு இயக்க சக்தி வடிவில் வெப்ப சக்தி காணப்பட்டு மோதுகை மூலம் இடம்மாற்றப்படும். |

இவற்றுள் யாதாயினும் ஒரு விடைக்கு (சோடியாக ஒப்பிடப்பட்டிருத்தல்


C. 1. டைனமோ/ மின்பிறப்பாக்கி
 2 ஆடல் மின்னோட்டம்
 3 (அசையும் சுருள் காந்த) நுணுக்குப் பன்னி/(பணப்பரிமாற்ற) காந்த அட்டை/ credit card / debit card / ஆகாய விமானம்/விண்வெளிக் கலம்/ ரோபோ/ தொலைபேசி வகை/ ஒலிவாங்கி

8. A. 1. ஆண்புணரி -விந்துத் தாய்க்கலம்
 பெண்புணரி - சூல்/ முட்டைத் தாய்க்கலம்

 2. ஒடுக்கற் பிரிவு
 3. விந்து - X > Y (X – Y இற்கிடையே , or / இடப்பட்டிருத்தல்/ ⓥ ⓥ எனக் காட்டப்பட்டிருத்தல் அவசியம்)
 சூல் -X (XX எனச் சோடியாக எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம் எனினும் X–X இற்கிடையே , இடப் பட்டிருப்பின் புள்ளி வழங்குக / ⓥ )

4. 1/2
5. a. நோயுள்ள ஆண் - $X^hY$
 b. காவிப் பெண் - $X^HX^h$
c. நோயற்ற பெண் - $X^HX^H$

B. 1. ஒளிமுறிவு
 2. சந்தர்ப்பம் B
3. அவதிக் கோணம்
4. ஊடகம்
5. a. ஒளிமுறிவு/ A
 b. ஒளித் தெறிப்பு/ B
6 a




கதிர்முறிவடையாது செம்பக்கத்தில் படும் வரை
செம்பக்கத்தில் கதிர் அகத்தெறிப்படைந்து முறிவடையாது வெளியேறும் வரை

b. கண்ணாடி வளியை விடவும் அடர்த்தி கூடிய ஊடகமாயிருத்தல்/ படுகதிர் ஊடகம் முறிகதிர் ஊடகத்தை விட அடர்த்தி கூட அவதிக் கோணத்திலும் கூடிய படு கோணத்தை ($45^o$) ஒளிக்கதிர் (கண்ணாடி - வளி இடைமுகத்தில்) அமைத்தல்

9. A. 1. $Ca^{++}$ -2
 OH- - 1

2. வெப்பம் வெளிவிடப்படும்

3.




தாக்கி மேலே
காட்டப்பட்டிருத்தல் –
விளைவு கீழே
காட்டப்பட்டிருத்தல் –
அம்புக்குறி கீழ்நோக்கி /சக்தி வெளியேறல்
காட்டப்பட்டிருத்தல் –
தாக்கி, விளைவுகளுக்கு பௌதிக நிலையுடன் பதார்த்தங்களை/ சேர்வைகளை **முழுமையாக** எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக

4. $H_2O$

5. $CO_2$/ $SO_2$

6. $Ca(OH)_2(aq) + CO_2(g)\ CaCO_3(s) + H_2O_{(l)}$ சரியான தாக்கம் முழுமையாக எழுதப்படல் (பௌதிகநிலை குறிப்பிடுதல் அவசியமில்லை) / $Ca(OH)_2(aq) + SO_2(g)\ CaSO_3(s) + H_2O_{(l)}$

7. அதிகரிக்கும்/ கூடும்
 B. 1. துடுப்பு வலித்து இயங்கும் படகு.
 இயங்கத்தக்க சக்கரங்களையுடைய கதிரைகளில் அமர்ந்திருக்கும் இரு நபர்களில் ஒருவர் மற்றவரைத் தள்ளுதல்

 2. F = ma/ F = 250 x 10
 F = 2500 (N) அலகு அவசியமில்லை

3. நியூட்டனின் 2ம்விதி / a oe F, a oe 1/m என இரண்டையும்/ ஆர்முடுகல் நேர்விகித சமன் -(சமநிலைப்புடாத) விசை, ஆர்முடுகல் நேர்மாறுவிகித சமன் - திணிவு என இரண்டையும் எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக.

4. உராய்வு விசை

5. மேலுதைப்பு


6. அதிகரிக்கும்/ முற்றாக அமிழும்.

7. (படகின் நிறை அதிகரிக்க மிதப்பதற்கு வழங்கப்படும்) **மேலுதைப்பும் அதிகரிக்கப்படவேண்டும். இதற்கு**

**இடம்பெயர்க்கப்படும் திரவ நிறை/ கனவளவு அதிகரிக்கப்படுவதற்காக** (படகு அமிழும் கனவளவு அதிகரிக்கும்).
தடித்த எழுத்திலுள்ள விடயங்களுக்குப் புள்ளிகளை வழங்குக.

# ஜிந்துப்பிட்டி மீண்டும் திறப்பு யாருக்கும் கொரோனா இல்லை

## அனில் ஜாசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

கொழும்பு 13 , ஜிந்துபிட்டி பிரதேசத்தில் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை கொரோனாத்தொற்றுக்குள்ளானதாகக் கூறப்பட்ட நபருக்கு தொற்று ஏற்படவில்லை என்பது பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அத்துடன் குறித்த பிரதேசத்திலிருந்து தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்ட 154 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை என்பதையும் அனில் ஜாசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

கொழும்பு - 13 , ஜிந்துபிட்டி பிரதேசத்தில் பதிவான கொவிட் தொற்று நோயாளர் என அடையாளங் காணப்பட்ட நபர் கரையோர பாதுகாப்பு வீரர் ஒருவராவார்.

அத்துடன் அவர் வெளிநாட்டிலிருந்து வந்ததனால் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்பதால் அவர் தொடர்பில் சுகாதாரப் பிரிவு தொடர்ச்சியாக கவனம் செலுத்தியது.

இதற்கமைவாக வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு அதன்போது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அடிப்படையில் அவர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது இனங்காணப்பட்டால் அதன்போது உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமைய பி.சி.ஆர். பரிசோதனையின் பெறுபேறாக உடனடியாக குறித்த நபர் கொரோனாத்தொற்றுக்குள்ளானவராக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேபோன்று அவருடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட 154 பேர் கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திற்கு தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இருப்பினும் தொற்று நோயாளராகக் கருதப்பட்ட நபர் தொடர்பில் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட 5 பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக இந்த நபர் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர் அல்ல என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் மிகவும் பாதுகாப்பான நடவடிக்கைகளோடு கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட 154 பேரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்கள் மத்தியில் எந்தவொரு கொவிட் நோயாளரும் அடையாளங் காணப்படவில்லை.

இதன் காரணமாக கொவிட் -19 நோயாளர் என்று முதலில் அடையாளங் காணப்பட்ட நபர் வைத்தியசாலையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட 154 பேரையும் மீண்டும் தமது வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)

## இடுகம கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய வைப்பு ஆயிரத்து 448 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 448 மில்லியனாக அதிகரித்துள்ளது.

வெலிசர சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்திய சாலை ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 44 ரூபா 53 சதம் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளது. குறித்த காசோலையை ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் (நிர்வாக மற்றும் வழங்கல்) கே.பி. எகொடவெலேயிடம் கையளிக்கப்பட்டது.

அயகம பிரதேச செயலாளர் அலுவலகம் 34 ஆயிரத்து 865 ரூபாய் 95 சதம், பேருவளை நகர சபை 131,200 ரூபாவையும் எச்.ஏ.ஆரியதாச 25 ஆயிரத்து 447 ரூபாய் 96 சதம், ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் வை.டீ. சித்ரசிறி 81 ஆயிரத்து 315 ரூபாவையும் நிசினி மொவின்யா குருகே 5,000 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

தற்போது இடுகம கொவிட்-19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 448 மில்லியனாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்புச் செய்து வருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் www.itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும். 0760700700/011 2320880/0112354340/ 0112424012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

## முக்கிய சந்தேக நபரைக் கைது செய்ய மக்களிடம் உதவி கோரும் பொலிஸார்

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகரை கைது செய்வதற்கு உதவுமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபராக இனங்காணப்பட்டுள்ள பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த பொலிஸ் பரிசோதகர் வெலிவேரிய பகுதியைச் சேர்ந்த வெஹெரவத்த கங்கானமலாகே வசந்த குமார எனும் 49 வயதுடைய ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த சந்தேக நபரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு அவரை கைது செய்வதற்கு உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த நபர் தொடர்பாக தகவல் அறிந்தவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய 071 859 1767, 011 242 2176 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு விடுத்து குறித்த பொலிஸ் அதிகாரி தொடர்பாக அறிவிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)



# ஆன்மீகம்

## நிச்சயம் வேண்டும் லட்சியம்!



வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள் இவ்வளவு பேர் எனப் பொருளாதார நிபுணர்கள் வரையறை செய்கின்றனர். ஆனால் ஒரு அறிஞரின் பார்வையில் யார் ஏழை தெரியுமா? "வாழ்க்கையில் எந்த லட்சியமும் இல்லாதவனே எல்லோரைக் காட்டிலும் ஏழையாகக் கருதப்படுகிறான்". தோன்றிற் புகழொடு தோன்றுக என்கிறது குறள். ஏதோ பிறந்தோம் - எப்படியோ இருந்தோம் எவ்வாறோ மறைந்தோம் என்பதல்ல வாழ்க்கை.

**"தேடிச் சோறு நிதம்தின்று - பல<br>சின்னஞ்சிறுகதைகள் பேசி - மனம்<br>வாடத் துன்பமிக உழன்று - பிறர்<br>வாடப் பல செயல்கள் செய்து - நரை<br>கூடிக் கிழப் பருவம் எய்தி - கொடுங்<br>கூற்றுக்கு இரைஎனப் பின்மாயும் - பல<br>வேடிக்கை மனிதரைப் போலே நான்<br>வீழ்வேன் என்று நினைத்தாயோ"**

என்று பாடுகிறார் மகாகவி பாரதியார்.

வேடிக்கை மனிதராகவும் வாழ்க்கை மனிதராகவும் வாழ்ந்து மறைந்து விடாமல் கோடிக்கை கூடிக் கும்பிடுகிற சாதனை மனிதராக அல்லவா நாம் சரித்திரம் படைக்க வேண்டும்! இன்று வரலாறாக வாழ்பவர்கள் அனைவரும் தனக்கென ஒரு லட்சியத்தை வரையறை செய்துகொண்டு அதை நோக்கிப் பயணப்பட்டு வெற்றி பெற்றவர்களே ஆவார்கள். கற்றும் கேட்டும் பழகியும் அறிவு வெளிச்சம் பெற்ற ஒருவனுக்குத்தான் எதிர்காலத்தில் இப்படி ஒரு துறையில் முன்னணியில் முகம் காட்ட வேண்டும் என்ற எண்ணம் கட்டாயம் தலைதூக்கும்.

உறுதியான ஒரு எண்ணம் உள்ளத்தில் உருப்பெற்றாலே அதை அவனால் அடைந்துவிட முடியும் என்பது தான் உளவியல் அறிஞர்களின் ஒட்டுமொத்தக் கருத்து. "நோக்கம் எது என்பதை முதலில் தீர்மானி.

அதுவே இலக்கு என்பதை உறுதி செய்துகொள். கையில் பணம் இல்லையே! உடலில் வலு இல்லையே, உதவி செய்ய நண்பர்கள் இல்லையே என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே! எதற்கும் பயப்படாதே! தயங்காதே இலக்கை நோக்கி அடியெடுத்து வை! தொடர்ந்து முன்னேறு சோதனைகள் விலகும். யாராலும் தடுக்க முடியாது என்கிறார் சுவாமி விவேகானந்தர். குறிக்கோள் இல்லாமல் வாழும் மனிதனைக் குரங்கு, கழுதை, ஒட்டகம் என்ற விலங்குப் பட்டியலில்தான் வைக்கிறார்கள் அறிஞர்கள்.

**பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர் கோதைமார் தம்<br>மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்பு வந்து<br>கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்**

என்று லட்சியம் இல்லாத மனிதரை இடித்துரைக்கிறது தேவாரம். இந்த கால கட்டத்திற்குள் இச்செயலை நான் நிறைவேற்றியே தீருவேன் என்று ஒருவன் தனக்குத்தானே கட்டுப்பாட்டை விதித்துக் கொள்ளும்போதுதான் அவனிடமிருந்து கட்டற்ற ஆற்றல் காட்டாறாய்ப் பொங்கி வழியும்.

ஒரு பாத்திரத்தில் பத்துத்துவாரங்கள் இருக்கும்போது அதனுள் இருக்கும் தண்ணீர் ஒவ்வொரு ஓட்டையினின்றும் வெளியே வழிந்து கொண்டிருக்கும் ஒன்பது ஓட்டைகளை அடைத்து விட்டால் மீதமுள்ள ஒரு துவாரம் வழியே அருவி போல நீர் ஆர்ப்பரித்துப் பாயும் அல்லவா! அதுபோலத்தான் சிறுசிறு ஆசைகளைப் புறம் தள்ளிவிட்டு வாழ்வின் இலக்காக ஒன்றை வகுத்துக்கொள்ளும் போதுதான் நம்முடைய எல்லையற்ற சக்தி நமக்கே புலப்படும்.



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

கலாநிதி முருகர் குணசிங்கம்

16

ஏற்கனவே மலையக இறப்பர் தோட்டங்களில் பணிபுரிந்த பல யாழ்ப்பாணத் தமிழர்களை ஸ்பூனர் மலேசியத் தீவகத்திற்குஅழைத்து வந்தார்.

அதேபோன்று மலேசியத் தீவகற்பத்தில் தபால்துறை, புகையிரதத் துறை, நெடுஞ்சாலைகள் துறை, இறப்பர் தோட்டங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றிற்குப் பொறுப்பாகவிருந்த பிரித்தானிய அதிகாரிகள், பல ஈழத் தமிழர்களை மலேசியத் தீபகற்பத்திற்கு அழைத்து உயர் பதவிகளையும் நடுத்தர நிர்வாகப் பதவிகளையும் வழங்கினர்.

மலேசியத் தீபகற்பத்தை நோக்கிய ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கியது.

இதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக மேற்படி காலகட்டத்தில் மலேசியத் தீவகற்பத்தில் நிலவிய பொருளாதார வளர்ச்சி அதற்கு ஏற்றவாறு நடுத்தரப் பதவிகளைப் பெறக்கூடிய ஆட்கள் இல்லாமை இரண்டாவதாக அமைதியான அரசியல் சூழ்நிலை மூன்றாவதாக ஏற்கனவே மலேசியத் தீவகற்பத்தில் பணிபரிந்த ஈழத் தமிழர்கள் தமது குடும்பங்களுக்கு அனுப்பும் பெருந்தொகைப் பணம், மலேசியாவில் உள்ள வசதியான வாழ்க்கை, ஓய்வூதியத் திட்டம், மருத்துவ, ஆங்கிலக் கல்வி வாய்ப்பு போன்றவை பற்றித் தமது குடும்பங்களுக்கும் உறவினர்களும் அனுப்புகின்ற கடிதங்கள், இவைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து வறுமையில் வாடிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் படித்த தமிழர்களை மலேசியா நோக்கிப் பெருமளவு குடிபெயர வைத்தது.

ஆயினும் ஈழத்தில் இருந்து குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து தமிழர்கள் மலேசியத் தீபகற்பத்திற்குப் புலம்பெயரும் முயற்சிகள் 1930 களில் இருந்து வீழ்ச்சி அடைவதைப் புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

இதற்குக் காரணம் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை பிரித்தானியக் குடியேற்ற நாடுகளையும் பாதித்தது. மலேசியத் தீபகற்பத்தில் இறப்பர் விளைச்சல் 1930 வரை பெரும் இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது. அதற்குப் பின்னர் விளைச்சல் குறைந்தது. வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டங்களில் மலேசியாவின் வெள்ளியச் சுரங்க வேலைகளுக்காகவும் வெள்ளிய உற்பத்தி வேலைகளுக்காகவும் பெருமளவில் சீனர்கள் மலேசியத் தீபகற்பத்துக்கு வரத் தொடங்கினர்.

அவர்களின் போட்டிகள் தொழில் துறையிலும் உத்தியோகத் துறையிலும் பெருக்கம் அடைந்தன. இதேபோல மலையக இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யப் பல இந்தியர்களும் மலேசியத் தீபகற்பத்தில் வந்து குடியேறத் தொடங்கினர்.

குறிப்பாக மலையாள மக்கள், நிர்வாகத் துறைகளையும் நடுத்தரப் பதவிகளையும் ஆட்கொள்ளத் தொடங்கினர்.

மேற்கூறப்பட்ட நிகழ்வுகளால் ஈழத் தமிழர்களின் வருகை குறைந்து போவதைக் காண முடிகின்றது. இருந்தும் இரண்டாம் உலகப் போர் வரையிலும் மேலும் மலேசியத் தீபகற்பம் 1957 இல் பிரித்தானிய ஆளுகையில் இருந்து விடுபடும் வரையிலும் ஈழத் தமிழர்கள் மலேசியத் தீபகற்பத்திற்குத் தொடர்ந்து சிறிய அளவிலேனும் சென்று கொண்டு இருந்தனர்.

1820 களில் இருந்து வணிகத் தொடர்புகளால் இலங்கையில் இருந்து சிறிய அளவில் மக்கள் மலேசியத் தீபகற்பத்திற்குச் சென்றதாக அறிய முடிகின்றது.

1867 இல் மலேசியத் தீபகற்பம் பிரித்தானியக் குடியேற்றப் பிரதேசமாக இடம்பெற்று 1874 இல் கையெழுத்திடப்பட்ட **பங்கோர் உடன்படிக்கையைத் (Pangkor Treaty)** தொடர்ந்து பிரித்தானியரின் இருப்பு மலேசியத்



தீபகற்பத்தில் உறுதியாயிற்று.

இதனைத் தொடர்ந்து மலேசியத் தீபகற்பத்தின் உட்கட்டுமானம், வளர்ச்சிப் பணிகளுக்காக பல்துறை சார்ந்த படித்த, ஆங்கிலக் கல்வி கற்ற, இடைநிலை அலுவலர்கள் பெருமளவில் தேவைப்பட்டனர்.

இதன் விளைவாக 1860 களில் இருந்தே பாரிய அளவில் ஈழத்தமிழர்கள் மலேசியத் தீபகற்பத்திற்குச் சென்று குடியேறுவதைப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

பல ஆயிரக்கணக்கில் சென்ற ஈழத் தமிழர்கள் மலாக்கா, பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய பிரதான துறைமுகம் சார்ந்த நகரங்களில் தமது வணிக உத்தியோக நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டு அங்கேயே வாழத் தொடங்கினர்.

அதனைத் தொடர்ந்து மலேசியத் தீபகற்பத்தில் உள்ள பிரதான நகரங்களான பினாங்கு, தைப்பிங், ஈப்போ, குவாலாலிப்பிஸ், தெலுக்கன்சன், கோலாலம்பூர், கிளாங், செரம்பான், மலாக்கா போன்ற இடங்களில் பெருமளவில் காணப்பட்டனர். குறிப்பாக மேற்கு மலேசியாவில் தான் குவிந்து காணப்பட்டனர்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் நீராவிக் கப்பல்கள் மூலம் கொழும்பு சென்று அங்கிருந்து தமிழ் நாட்டுத் துறைமுகங்களுக்குச் சென்று தொடர்ந்து பல நாட்கள் அங்கு காத்திருந்து பின்னர் மலேசியத் தீபகற்பத்திற்குச் சென்றுள்ளனர்.

ஆனால் கொழும்பு-யாழ்ப்பாணம் புகையிரதச் சேவை 1895 இல் தொடங்கப்பட்ட பிறகு அதன் வழியாகக் கொழும்புக்கு விரைந்து சென்று பின்னர் அங்கிருந்து பினாங்கிற்கோ சிங்கப்பூருக்கோ செல்ல முடிந்தது.

1911 இல் இருந்து 1947 வரை அல்லது அதற்கு அப்பால் இன்றுவரை மலேசியத் தீபகற்பத்தில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின்படி ஈழத் தமிழர் அல்லது இலங்கைத் தமிழர் என்ற இன அடிப்படையிலான புள்ளி விபரங்கள் இடம் பெறவில்லை.

1911 சனத்தொகை விபரங்களில் இலங்கைத் தமிழர்கள் "இந்தியத் தமிழர்" என்ற வரையறைக்கு உள்ளேயே கணிக்கப்பட்டுள்ளனர். அதைப்போலவே 1921 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு அறிக்கையும் உள்ளது.

மேலும் 1931, 1947 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு அறிக்கை, இலங்கைத் தமிழர், சிங்களவர் ஆகியோரை 'இலங்கையர்' என்ற வரையறைக்குள் கணித்துள்ளது.

ஆனால் 1957 இல் எடுக்கப்பட்ட குடிமை மதிப்பு அறிக்கை பெருமளவிற்கு இன அடிப்படையிலான விபரங்களைக் கொண்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத் தமிழர் மலேசியத் தீபகற்பங்களில் வாழ்ந்த விபரங்களின் ஊடாகவும் மொத்தம் ஈழத் தமிழர்கள் பற்றிய ஓரளவு அறிய முடிகின்றது.

மலேசியத் தீபகற்பத்தில் பிரித்தானியரினால் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களையும் பல்வேறு அறிக்கைகள் வாயிலாக எடுக்கப்பட்ட தரவுகளினூடாகவும் மலேசியத் தீபகற்பத்தில் 1911 ஆம் ஆண்டில் இருந்து 1957 வரை எத்தனை இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர் என்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

இதன்படி 1911 இல் 6800 தமிழர்களும் 1921 இல் 9981 தமிழர்களும் 1931 இல் 12,700 தமிழர்களும் 1947 இல் 15,411 தமிழர்களும் 1957 இல் 24,738 தமிழர்களும் இருந்ததாகக் காணப்படுகின்றது.

மலேசியத் தீபகற்பம் பிரித்தானியர் ஆளுகையில் இருந்து விடுபட்டு சுதந்திரம் அடைந்த 1967 இன் பின்னர் அரசியல் மாற்றம் காரணமாக ஈழத் தமிழர்கள் மலேசியாவுக்குள் தொழில் செய்யப் புலம்பெயர்வது பெரிதாக இடம் பெறவில்லை.

மலேசிய. அரசின் சனத் தொகைகளைக் கணக்கெடுப்பு, இன அடிப்படையில் இடம்பெறாததால் எத்தனை ஈழத் தமிழர்கள் மலேசியாவில் தற்பொழுது வாழ்கின்றார்கள் என்ற விபரங்களை மலேசியத் தொகை இலாகாவில் இந்நூலாசிரியரால் பெற முடியவில்லை. 1977 இற்குப் பின்னர் ஏற்பட்ட தமிழருக்கு எதிரான இனக்கலவரத்தின் தொடர்ச்சியின் விளைவாக பல ஈழத் தமிழர்கள் அகதிகளாக மலேசியாவிற்குள் நுழைந்து உள்ளார்கள்.

இந்த அகதிகள் தொடர்பாக ஈஸ்வரலிங்கம் என்பவரை 28 ஜனவரி 2014 இல் இந்நூலாசிரியர் சந்தித்து நேர்காணல் ஒன்றை நடத்தியபோது சில தகவல்களைப் பெற முடிந்தது.

ஈஸ்வரலிங்கம் மலேசியாவில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு உதவி செய்யும் ஒருவர் ஆவார். 2009 இற்கு முன்னர் மலேசியாவுக்கு அகதிகளாகச் சென்ற ஈழத் தமிழர்களை **UNHCR** தற்காலிக அகதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அடிப்படை உதவிகளான மருத்துவ உதவிகள், பிள்ளைகளின் படிப்புச் செலவு போன்றவற்றையும் வேலை செய்யும் அனுமதிப் பத்திரத்தையும் வழங்கியது.

ஆனால் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மலேசியா சென்ற ஈழத்தமிழ் அகதிகளை **UNHCR** அகதிகளாக ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது.

அவர்களுக்கு எதுவித உதவிகளும் கிடைப்பது இல்லை. ஈழப்பற்றாளர்கள் தொடர்பான சில நிறுவனங்களும் இந்தியத் தமிழர்களும் சீன மக்களும் அவர்களுக்கு உணவு, உடைகள், மருத்துவப் பணிகள் போன்றவற்றைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றனர். இருந்தும் அவர்கள் அடிக்கடி மலேசியப் பொலிஸாரால் துன்புறுத்தப்படுவதாகவும் அறிய முடிகின்றது.

மலேசியாவில் வாழும் செல்வம் படைத்த ஈழத்துத் தமிழர்கள் இத்தகைய அகதிகளுக்குப் பெரிதாக எதையும் செய்வது இல்லை என்பதும் ஈஸ்வரலிங்கத்தின் குற்றச்சாட்டாக இருந்தது.

(தொடரும்)

# வெளிநாடு

## னாவால் உச்சமடையும் உயிரிழப்பு

## வில் 5 இலட்சத்தை தாண்டியது



(ஜெனிவா)

**உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்தை கடந்துள்ளது.**

சீனாவில் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகளுக்கு பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்தை கடந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, ஒரு கோடியே 17 இலட்சத்து 56 ஆயிரத்து 506 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 45 இலட்சத்து 8 ஆயிரத்து 612 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 58 ஆயிரத்து 786 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

கொரோனாவில் இருந்து 67 இலட்சத்து 53 ஆயிரத்து 170 பேர் குணமடைந்துள்ளனர். ஆனாலும், உலகம் முழுவதும் வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 5 இலட்சத்து 41 ஆயிரத்து 86 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவுக்கு அதிக உயிரிழப்பை சந்தித்த நாடுகள்:-

அமெரிக்கா - ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 981 பிரேசில் - 65 ஆயிரத்து 556 இங்கிலாந்து - 44 ஆயிரத்து 236 மெக்சிக்கோ - 31 ஆயிரத்து 119, ஸ்பெயின் - 28 ஆயிரத்து 388 இத்தாலி - 34 ஆயிரத்து 869, பிரான்ஸ் - 29 ஆயிரத்து 920, இந்தியா - 20 ஆயிரத்து 184 போன்றனவாகும். (ஜ-2)

## வானில் பயங்கரம்

### ங்கள் நேருக்கு நேர் மோதல்

### ழப்பு, மீட்புப் பணி தீவிரம்



மோதி விபத்துக்குள்ளானது.

விமானங்கள் வானில் நேருக்கு நேர் மோதியதையடுத்து அவை ஏரிக்குள் விழுந்தன.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் இந்த விபத்தில் இரண்டு விமானங்களிலும் இருந்த அனைவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 2 பேரின் உடலை மட்டுமே மீட்புப்படையினரால் கண்டு பிடிக்க முடிந்தது.

ஏரியில் மூழ்கிய எஞ்சியவர்களின் உடலை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-5)

இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் அவளை பல்வேறு இடங்களில் தேடினர்.

அப்போது குப்பை கொட்டச் சென்ற முள்காடு பகுதியில் சிறுமி உடல் கருகிய நிலையில் சடலமாகக் கிடந்தாள். அவளை மர்ம நபர்கள் சிலர் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து கொன்று இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதுகுறித்து தகவல் அறிந்த திருச்சி டி.ஐ.ஜி. ஆனிவிஜயா, மாவட்ட பொலிஸ் சூப்பிரண்டு ஜியாவுல் ஹக் மற்றும் சோமரசம்பேட்டை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

சிறுமி எரித்துக்கொல்லப்பட்ட வழக்கில் சிறுமியின் உடல் கிடப்பதாக அடையாளம் காட்டிய உறவினர்கள் 2 பேரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி சோமரசம்பேட்டை அருகே எரிந்த நிலையில் சிறுமியின் உடல் கிடந்த இடத்தில் மத்திய மண்டல ஐ.ஜி.ஜெயராமன், திருச்சி டி.ஐ.ஜி.ஆனி விஜயா உள்ளிட்டோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிலையில் திருச்சியில் 14 வயது சிறுமி எரித்துக் கொல் லப்பட்ட சம்பவம் தொடர்பாக தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் விசாரணையை தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## உடலால் ஒட்டிப் பிறந்தவர்கள் உலகை விட்டுப் பிரிந்தனர்

(வோஷிங்டன்)

உடலால் ஒட்டிப்பிறந்து, அறுவைச் சிகிச்சை மூலம் பிரிக்காமல் உலகில் நீண்டகாலம் வாழ்ந்த இரட்டைச் சகோதரர்கள் கடந்த 4 ஆம் திகதி அமெரிக்காவில் மரணமடைந்தனர். அவர்களுக்கு வயது 68.



ரோனி, டோனி கால்யன் என்ற பெயர் கொண்ட உடலால் ஒட்டிப்பிறந்த இரட்டைச் சகோதரர்கள் அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தில் உள்ள பீவர்கிரீக் எனும் இடத்தில் 1951 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி பிறந்தனர். இருவரின் வயிற்றுப் பகுதியும் பிறந்ததில் இருந்தே ஒட்டி இருந்தது. அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்தால் யாரேனும் ஒருவர் இறக்க நேரிடும் என்பதால் இருவரையும் அப்படியே மருத்துவர்கள் விட்டு விட்டனர்.

ரோனி, டோனி கால்யன் இருவரும் உடல் ஒட்டிய சகோதரர்களாவே வாழ்ந்து வந்தனர். உலகிலேயே நீண்ட காலம் வாழும் உடலால் ஒட்டிய இரட்டைச் சகோதரர்கள் எனும் பெருமையுடன் தங்களின் 63 ஆவது பிறந்தநாளை 2014 ஆம் ஆண்டு கொண்டாடினார்கள்.

ரோனி, டோனி கால்யான் இருவரும் தாங்கள் வளர்ந்தபின் பிழைப்புக்காக சர்க்கஸில் நடித்து, திருவிழாக்கள், பண்டிகைகளில் வலம் வந்து, மக்களை ஈர்த்து பணம் ஈட்டி வாழ்ந்து வந்தனர். இருவரின் வருமானத்தால்தான் நீண்ட காலம் குடும்பத்தை நடத்த முடிந்தது என்று இருவரின் மற்றொரு சகோதரர் ஜிம் கால்யான் தெரிவித்தார்.

சர்க்கஸ் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதிலிருந்து 1991 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றபின் 2010 ஆம் ஆண்டு வரை டேட்டன் நகரில் வசித்து வந்தனர். அதன்பின் மீண்டும் குடும்பத்தினருடன் சேர்ந்தனர். டேட்டன் நகரில் உள்ள மக்கள் இருவரின் நிலையை அறிந்து நிதிதிரட்டி, வீட்டை புத்தாக்கம் செய்து, தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தனர். இரட்டைச் சகோதர்கள் இருவரும் வெளியே சென்று வருவதற்காக பிரத்தியேகமாக ஒரு வாகனத்தையும் உருவாக்கிக் கொடுத்தனர்.

இந்நிலையில் வயது முதுமை காரணமாக கடந்த 6 மாதங்களாக ரோனி, டோனி கால்யான் இருவரும் உடல் நலம் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே இருந்த நிலையில் கடந்த 4 ஆம் திகதி உயிரிழந்தனர் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர். (2)

## கண்காணிப்பு செயற்கைக் கோளை

### வெற்றிகரமாக விண்ணில் ஏவியது இஸ்ரேல்

(ஜெருசலேம்)

இஸ்ரேல், தனது பாதுகாப்புக்கான புதிய கண்காணிப்பு செயற்கைக் கோளை விண்ணில் ஏவியுள்ளது. ஈரானின் அணு ஆயுத நடவடிக்கைகளை கண்காணிப்பது மற்றும் பிராந்தியத்தில் உள்ள அபாயங்களை கண் காணிப்பது ஆகியவற்றுக்காக இந்த விண்கலம் அனுப்பப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்தது.

மேம்பட்ட திறன்களைக் கொண்ட மின்ஒளியியல் உளவு செயற்கைக்கோளான 'ஒபேக் 16' நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் விண்ணில் ஏவப்பட்டது.

இதையடுத்து புவியின் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்ட செயற்கைக்கோள், தகவல்களை பரிமாறத் தொடங்கியுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து இராணுவ அமைச்சர் பென்னி கானட்ஸ் "ஒபேக் 16" உளவு செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது அசாதாரண சாதனையாகும். இஸ்ரேல் அரசின் பாது காப்பிற்கு தொழில்நுட்ப மேன்மையும் உளவுத்துறை திறன்களும் அவசியம் எனத் தெரிவித்தார். (2-5)

# இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக பல்கலை.விரிவுரையாளர்களுக்கு வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

**இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு காணி உறுதிப்பத்திரத்துடன் கூடியதாக மாடி வீட்டுத் திட்டமொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.**



களனி, கொழும்பு, ஜயவர்தனபுர, மொரட்டுவ மற்றும் அழகியற்கலை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வீடுகளின்றி பாரிய நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளனர். இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை செயலாளர் அடங்கிய குழு ஆராய்ந்துள்ளது.

ஒறுகொடவத்தை பிரதேச வீதிக் கட்டமைப்பு பாரியளவில் அபிவிருத்தி அடைந்துள்ள நிலையில் தவணை அடிப்படையில் செலுத்தி பெறும் வகையில் மாடி வீட்டுத் திட்டமொன்றை நிர்மாணிக்க எதிர்பார்ப்பதாகவும் விரிவுரையாளர்களின் பிரச்சினை தொடர்பில் தலையீடு செய்யுமாறு ஜனாதிபதியும் பிரதமரும் தனக்கு அறிவித்ததாக உயர் கல்வி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர்,

கொரோனாத் தொற்றினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அரசாங்கம் பல்வேறு சலுகைகளையும் நிவாரணங்களையும் மக்களுக்கு வழங்கியது. சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட சலுகை நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தவறானது. 30 இலட்சம் ரூபா வரையிலான வருமானம், வருமான வரியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் கூடுதலான வரிச்சலுகை இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஜ-4)

# தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாத்து பொருளாதாரத்தை வளமாக்குவதே இலக்கு

## கருணா திட்டவட்டம்

(அம்பாறை)

தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாத்து பொருளாதாரத்தை வளமாக்குவதே தனது இலக்கு என ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

அம்பாறை, கல்முனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் கூறுகையில், "அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே தொடரும். அந்த ஆட்சியில் பங்காளிக் கட்சியாக இருந்து மக்களுக்கான சேவைகளை நாம் முன்னெடுப்போம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது நானே. ஆனால் சம்பந்தர் ஐயா 'அப்படியில்லை புலிகளால் உருவாக்கப்படவில்லை' என்று கூறுகிறார். உண்மையில் அக்கட்சி உருவாக்கத்தின்போது அருகில் நானிருந்தேன். இன்றும் உயிருடன் இருக்கிறேன். இதனை எப்படி மறைப்பது?

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாத்து பொருளாதாரத்தை வளமாக்குவதே எனது இலட்சியம் என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# சவுதி அரேபியாவில் சிக்கியிருந்த 275 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சவுதி அரேபியாவில் சிக்கியிருந்த 275 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் விசேட விமானத்தின் மூலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்களை விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள ஹோட்டல்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கதிர்காமத்தில் பக்தர்களுக்குத் தடை

(கொழும்பு)

கதிர்காம கந்தனின் வருடாந்த உற்சவத்திற்கு பக்தர்கள் பங்கேற்பது தடை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காம கந்தனின் வருடாந்த உற்சவமானது எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விதியும் மதியும்!

இப்பொழுது நாம் பார்க்கப் போவது மகாபாரதத்திலே ஒரு காட்சி. "தருமரிடம் இருக்கின்ற பதவியைப் பறிக்க வேண்டும். பொருளைப் பறிக்க வேண்டும். அதற்கு என்ன வழி?" என்று ஒரு ஆலோசனை நடந்தது ஒரு இடத்திலே.

"சூதாட்டத்தின் மூலமாகத்தான் தருமரின் பதவியையும் பொருளையும் பறிக்க முடியும்" என்று யோசனை சொல்கிறான் ஒருத்தன். வேறு யாரு சகுனிதான். உடனே துரியோதனன் என்ன செய்தான்? அழகாக ஒரு மண்டபம் கட்டுகின்றான் தருமருக்கு, "மண்டபம் காண வாருங்கள் மனங்கலந்து சூதாடி மகிழ்வோம்" என்று ஓலை எழுதினான். அந்த ஓலையிலே திருதராஷ்டிரனைக் கையெழுத்துப் போடச் சொல்கிறான். அதன் பின் அதை விதுரன் மூலமாக அனுப்பி வைத்தான்.

தருமரிடம் அந்த ஓலை வந்து சேர்ந்தது. உடனே அந்த ஓலையை எடுத்துக் கொண்டு தம்பிகளிடம் போகின்றார். தனித்தனியாக யோசனை கேட்கின்றார். முதல் தம்பியைப் பார்க்கின்றார். "இதோ பார் ஓலை வந்திருக்கின்றது. கையெழுத்து போட்டிருக்கின்றது திருதராஷ்டிரர். மண்டபம் காணப் போவோமா? என்கின்றார். அவ்வாறே ஏனைய தம்பிகளிடமும் சென்று திருதராஷ்டிரர் கையெழுத்திட்ட ஓலை... துரியோதனன் அனுப்பிய ஓலை...விதுரர்" கொண்டு வந்த ஓலை என்று கூறுகின்றான்.

கடைசியில் சகாதேவனிடம் செல்கின்றான். அவன் கேட்கின்றான் இந்த ஓலையிலே கையெழுத்துப் போட்டது யார் என்று? திருதராஷ்ரர் என்கின்றார் தருமர். அனுப்பியது யார் என்கின்றார்? துரியோதனன் என்கின்றார். கொண்டு வந்தது யார் என்கிறான்? விதுரன் என்றான். இந்தக் கேள்விகளை சகாதேவன் திருப்ப திருப்ப கேட்கிறான். தருமரும் திருப்ப திருப்ப பதில் சொல்கின்றான். "ஏன் இப்படி திருப்ப திருப்ப கேட்கின்றாய் என்றார்" இப்பொழுது சகாதேவன் சொல்கின்றான்.

"நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் அண்ணா... ஓலையிலே கையெழுத்திட்டவர் ஒருவர், அனுப்பியவர் இன்னொருத்தர், கொண்டு வந்தவர் இன்னொருத்தர் என்று நினைக்கின்றீர்கள். இந்த மூன்றையும் செய்தது ஒருத்தன்தான். அவன் இப்பொழுது நம் அரண்மனை வாசலிலே நின்று கொண்டிருக்கின்றான்" என்றான்.

யார் அது? என்று கேட்கின்றார் தருமர். அதுதான் விதி! என்கின்றார் சகாதேவன். விதியின்படி ஒன்று நடக்க வேண்டும் என்று இருந்தால் மதியைக் கொண்டு அதை மாற்ற முடியாது என்கின்றார் ஒரு வரியவர். (புலவர் கீரன்) ஏன் என்றால் விதி வருவதே மதியின் வழியாகத்தான் என்கின்றார் அவர்.

அப்படி என்றால் விதியை மாற்றுவதற்கு வழியே கிடையாதா? என்று கேட்டார். ஏ ன் இல்லை? உண்டு. விதி அழைத்துக் கொண்டு இருட்டுப் பாதையிலே இடறி விடாமல் இருக்க வேண்டும் என்றால் கையிலே ஒரு கைவிளக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்கின்றார்.

''அது என்ன கைவிளக்கு?'' என்றான். அதுதான் கடவுள் நம்பிக்கை என்கின்றார் அவர். ஒரு ஆள் எதையோ தொலைத்து விட்டு வீட்டுக்குள்ளே தேடிக் கொண்டிருந்தார். என்னத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றாய் என்றார் வீட்டுக்கார அம்மா.

''பேனாவைத் தொலைத்துவிட்டேன் என்றார் அவர். எங்கே தொலைத்தீர்கள் என்று கேட்டார். சினிமாத் தியேட்டரிலே என்றார் அவர். சினிமா தியேட்டரின் உள்ளே தொலைத்து விட்டு வீட்டுக்குள்ளே தேடினால் கிடைக்குமா? என்றார் அவர்.''

அதற்கு அவர் ''விபரம் தெரியாமல் பேசாதே... அங்கே ஒரே இருட்டாக இருக்கு. எப்படித் தேட முடியும்? அதுதான் வெளிச்சம் உள்ள இடமாகப் பார்த்து தேடிக் கொண்டிருக்கின்றேன்'' என்றார்.

இதற்கு என்ன அர்த்தம் ?


அவருக்கு விதியும் சரியில்லை. மதியும் சரியில்லை என்று அர்த்தம்.

## காத்தான்குடி மோட்டார் சைக்கிள் குண்டுவெடிப்புடன்

# சஹ்ரான் குழுவிற்குத் தொடர்பு என்பதை

# இரு நாட்களில் கண்டறியக் கூடியதாக இருந்தது

## முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி சாட்சியம்



**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்கு முன்னர், கடந்த 2019 ஏப்ரல் 16 ஆம் திகதி காத்தான்குடி - பாலமுனை பகுதியிலுள்ள பால் தோனா தோட்டத்தில் மோட்டார் சைக்கிளில் குண்டு ஒன்று வெடிக்கச் செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில், சஹ்ரானின் குழு உள்ளமையை ஆரம்பக்கட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இரு நாட்களுக்குள்ளேயே வெளிப்படுத்தக் கூடியதாக இருந்ததாக காத்தான்குடி பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் மொஹம்மட் ஜெசூலி தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியமளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், "முஹம்மட் முஸ்தபா அசனுல் பசரி எனும் நபர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே கடந்த 2019 ஏப்ரல் 17 ஆம் திகதி நானும் எனது குழுவினரும் குறித்த தோட்டத்துக்குச் சென்றோம். நாம் செல்லும் போது இரவு ஆகிக்கொண்டிருந்தது.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இருந்து பல கிலோமீற்றர் தூரத்திலேயே அந்தத் தோட்டம் அமைந்திருந்தது. பாலமுனை பகுதிக்கு சென்று பிரதான வீதியிலிருந்து பாலமுனை கடற்கரை வீதி நோக்கி 3 முதல் 4 கிலோமீற்றர்கள் சென்று வலது பக்கம் திரும்பும் போது குறித்த தோட்டம் உள்ளது. 43 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட அந்த காணி பால் தோனா தோட்டம் என அடையாளப்படுத்தப்படுகின்றது.

அந்த தோட்டம் ஒன்று, இரண்டு ஏக்கர்களாக பிரிக்கப்பட்டு விற்பனைக்காக தயார் செய்யப்பட்டுள்ளது. சுற்றி கொங்கிறீட் கணுக்கள் மற்றும் தகரங்களால் மதில் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் செறிவான குடியேற்றங்கள் இல்லை. மின்சார வசதி கூட இல்லை. அந்த தோட்டத்திலிருந்து அதாவது வெடிப்பு இடம்பெற்ற பகுதியில் இருந்து 300 முதல் 400 மீற்றர் தூரத்தில் இராணுவத்தின் சிங்க ரெஜிமெண்ட் படைப் பிரிவின் சிறிய முகாம் ஒன்று உள்ளது.

நாம் குறித்த இடத்தை அடைந்து வெடிக்கச் செய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை பார்வை இட்டோம். நான் 25 வருடங்கள் பொலிஸ் விஷேட அதிரடிப் படையில் சேவையாற்றியவன். வெடிபொருள் தொடர்பில் பயிற்சி பெற்றவன்.எனவே அதனை பார்த்ததும் வெடிபொருள் கொண்டு மோட்டார் சைக்கிள் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளமை தெரிந்தது. அருகே இருந்த தகர மதில்கள், கொங்கிறீட் தூண்களிலும் அதன் பாதிப்பை அவதானிக்க முடிந்தது.

நான் விடயத்தை உடனடியாக பொலிஸ் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆரச்சியிடம் கூறினேன். அவர் மேல் அதிகாரிகளுக்கு அறிவித்தார். அன்று இருட்டிவிட்டதால் அங்கு பொலிஸ் பாதுகாப்பு இட்டுவிட்டு சென்றோம்.

மீள மறுநாள் அதாவது 2019 ஏப்ரல் 18 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் அங்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தோம். அப்போது பொலிஸ் தடயவியல் பிரிவினர், அனைத்து உளவுப் பிரிவினரும் அங்கு வந்திருந்தனர். அப்போது வெடித்த மோட்டார் சைக்கிளில் செசி இலக்கத்தை எம்மால் அங்கிருந்த எச்சங்களில் இருந்து அடையாளம் காண முடிந்தது.

அதனை மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்துக்கு கொடுத்து வெடிக்க வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை கண்டறிந்தோம்.

அதன் பதிவு உரிமையாளரை தேடினோம். அப்போது அந்த மோட்டார் சைக்கிள் களனிப் பகுதியைச் சேர்ந்த நில்மினி ஜயகொடி என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவரிடம் விசாரித்த போது, அவர் தனது நண்பரான துஷார பிரியந்த என்பவர் ஊடாக அந்த மோட்டார் சைக்கிளை அருண விக்ரமசேன எனும் மோட்டார் சைக்கிள் விற்பனையாளர் ஒருவருக்கு விற்றுள்ளமை தெரியவந்தது.

அவரிடம் சென்று விசாரணை நடத்திய போது, ஜராட் யசிந்த சில்வா என்பவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி கொடுக்கப்பட்டு அந்த மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது.

ஜராட்டை நாங்கள் விசாரித்த போது, அவரது பணப் பையுடன் தேசிய அடையாள அட்டை தொலைந்து போயுள்ளமை தெரியவந்ததுடன், அவரது அடையாள அட்டையில் சிம் அட்டைகள் பெறப்பட்டு அவற்றை சஹ்ரான் கும்பல் பயன்படுத்துவது தொடர்பில் அப்போதும் சி.ஐ.டிக்கு அவர் வாக்கு மூலம் கொடுத்துள்ளமை தொடர்பிலும் தெரியவந்தது.

இவ்வாறான நிலையில் இந்த மோட்டார்சைக்கிள் வெடிப்புச்சம்பவத்துடன் சஹ்ரான் கும்பல் தொடர்புபட்டுள்ளமையை நாம் கண்டறிந்தோம். இந் நிலையில் தான் நாம் அவற்றை மையப்படுத்தி கடந்த 2019 ஏப்ரல் 19 ஆம் திகதியே மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றில் இது தொடர்பில் வழக்கு பதிவு செய்தோம்.

இவ்வாறான நிலையில் கடந்த 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய இந்த விசாரணைகளை சி.ஐ.டி.யிடம் கையளித்தோம்" என முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி சாட்சியமளித்தார். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 180 | 300 |
| தக்காளி | 180 | 150 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 130 | 120 | 80 |
| கோவா | 150 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 160 | 170 | 160 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 |
| புடோல் | 60 | 70 | 60 | 100 |
| வாழைக்காய் | 120 | 110 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 150-300 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 140 | 80 | 60 |
| லீக்ஸ் | 160 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 110 | 100 |
| கறிமிளகாய் | 150 | 200 | 100 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 160 |
| போஞ்சி | 200 | 130 | 130 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 400 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 250 | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 30-40 | 50 |




## பாம்பிற்கு பிராமணன் இட்ட சாபம்

ஒரு பெரிய கானகத்தில் மந்தவிசன் என்கிற பாம்பு ஒன்று, ஒருநாள் இரையைத் தேடிப் பார்த்தும் ஏதும் கிடைக்காததால் சோகமாக ஓர் ஏரிக்கு அருகில் வந்து அமர்ந்தது.

அந்த ஏரியில் நிறைய தவளைகள் இருந்தன. இந்த தவளைகளை எப்படியாவது தந்திரமாகப் பிடித்து உண்டு விட வேண்டும் என்று திட்டமிட்டது.

அப்போது அந்த பக்கம் வந்த தவளை ஒன்று ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்? என்று கேட்டது. அதற்கு பாம்பு இன்று காலையில் நான் இரை தேடி செல்லும் வழியில் ஒரு தவளை குறுக்கே சென்றது.

நான் அதனை பிடிக்க சென்றேன். அப்போது ஒரு பிராமணன் மகன் புதரின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். நான் தேடிவந்த தவளை என்று நினைத்து, அந்த பிராமணனின் பிள்ளையுடைய பாதத்தைக் கடித்து விட்டேன்.

அவன் இறந்து விட்டான். அதனால் கோபம் கொண்ட பிராமணன் என்னை சபித்து விட்டான் என்றது பாம்பு.

அந்தப் பிராமணன் நீ, இனிமேல் தவளைக்குச் சேவை செய்து வாழக் கடவாய் என்று சபித்து விட்டான். நான் இந்த ஏரிக்கரையில் உள்ள தவளைகளுக்குச் சேவகம் செய்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறியது.



அந்தத் தவளை, தவளை ராஜாவிடம் கூறியது. அனைத்துத் தவளைகளும் ஏரியை விட்டு வெளியே வருமாறு உத்தரவிட்டது. ஏ பாம்பே! அனைத்துத் தவளைகளையும் உன் முதுகின் மீது ஏற்றிக் கொண்டு செல்! என்று கட்டளையிட்டது.

உடனே பாம்பு மிகவும் பவ்வியமாக தவளைகளை தன் முதுகில் சுமந்து சென்றதில் பாம்பு சோர்வாகி விட்டது. தவளை ராஜா பாம்பிடம் ஏன் சோர்வாக இருக்கிறாய்? என்று விசாரித்து எனக்கு மிகவும் பசிக்கிறது என்றது பாம்பு. இனிமேல் நீ சிறிய தவளைகளை பிடித்து உண்டு கொள் என்று உத்தர விட்டது.

தவளை ராஜா கூறியதைப் போலவே அந்த பாம்பு சிறிய தவளைகளை சாப்பிட்டுக் கொண்டு பெரிய தவளைகளை சுமந்து கொண்டும் திரிந்தது. அப்போது அக்காட்டிற்குள் நுழைந்த ஒரு புதிய பாம்பு இதைப் பார்த்து ஏன் உன் முதுகில் சுமந்து கொண்டு செல்கிறாய் என்று கேட்டது. அதற்கு அந்த பாம்பு, எல்லாம் காரணமாகத் தான்! காலம் கடந்த பின் உனக்கே தெயும் என்றது.

சில நாட்களில் அந்த பாம்பு தவளைகளை ஏமாற்றி அனைத்து தவளைகளையும் உண்டு விட்டது. இறுதியாக தவளை ராஜாவையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டது.

**நீதி:**

**தனது புத்தியால் தன் எதிரியை அனுசரித்து செல்வது போல் அனுசரித்து சென்று புத்தியால் வெல்ல வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை




வட இந்தியாவில் சிந்து நதிக்கரையோரமாக சிந்து சமவெளி நாகரிகம். உருவாக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் தென்னிந்தியாவில் திராவிடர் நாகரிகம் செழித்து வளர்ந்து கொண்டிருந்தது.

இந்தியாவிற்குள் நுழைந்த கிரேக்கர்களை ஓட ஓட விரட்டிய மௌரியப் பேரரசின் கைகள் வட இந்தியா மட்டுமன்றித் தெற்கே கர்நாடகம் வரைக்கும் நீண்டன.

ஆனால் சந்திரகுப்தர் தொடங்கி வேறு எந்த மௌரியப் பேரரசாலும் தமிழ்நாட் டைத் தொடக் கூட முடியவில்லை.

மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டாலும் அயலாரைத் தமிழ் நாட்டு சிம்மாசனத்தில் அமரவைக்கத் துளி கூட இடம் கொடுக்கவில்லை.

அதிலும் சோழர்கள் பிற்காலத்தில் வடக்கேயும் கடல் தாண்டியும் புலிக் கொடியை உயரப் பறக்க விட்டவர்கள். இந்த வீரப் பரம்பரையின் ஆரம்பப் பள்ளி, கரிகாலசோழன்.

சங்ககாலத்தில் வாழ்ந்த சோழமன்னர்களின் அதிக கவனத்திற்கு வருகின்ற மன்னர் சோழன், கரிகாலன், பெருவளத்தான் என்கிற கரிகால சோழன் (இவருக்கு முன்னால் ஒரு கரிகாலன் சோழர் மன்னராக ஆட்சி செய்திருக்கிறார்).

இந்த சங்ககால மன்னரைப் பற்றிப் பாடசாலை மாணவர்களுக்குக்கூட நன்கு தெரியும். இளமையில் தீயில் சிக்கி உயிர் பிழைத்தது, அறிவுரை கேட்க வந்த முதியோர்கள் தம்மைச் சிறுவன் என்று ஒதுக்கியதால் முதியவர் வேடமிட்டு அவர்கள் பிரச்சினையைத் தீர்த்தது என்று கரிகாலன் பற்றி நிறையக் கதைகள் உள்ளன.

இவர் தான் சோழர்களின் முதல் ஹீரோ. இவர் சாதித்துக்காட்டியதுதான் பிற்கால சோழர்களுக்கு முன்னுதாரணமாக இருந்திருக்கிறது.

இமயம் வரை சென்ற வீரச்சோழ மன்னர் கரிகாலன் தஞ்சைக்கு 24 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வெண்ணி என்கின்ற ஊரில் நிகழ்ந்த போரில் கரிகாலன், சேரன் பெருஞ்சேரலாதனையும் பாண்டிய மன்னர் ஒருவரையும் வீழ்த்தியதாக சங்க காலப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

இமயம் வரை படையெடுத்த கரிகாலன், இமயத்தில் புலி இலட்சினையைப் பொறித்தது வரலாறு. அடுத்ததாக, இலங்கையின் மீது படையெடுத்துத் தன் வீரத்தை நிரூபித்துக் காட்டினார்.

சிங்களவர்கள் 12 ஆயிரம் பேரை சிறை செய்து, பிறகு அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்துவந்து காவிரிப் பூம்பட்டினத்தில் கோட்டை கட்டும் கட்டுமான வேலையில் அவர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்.

ராஜராஜசோழன் ஆண்ட தஞ்சையைச் சங்க காலத்தில் செழிப்புற வாழ வைத்ததில் கரிகாலனுக்கு மிகப்பெரிய பங்குண்டு.

சோழர்களின் சரித்திரத்தில் தஞ்சைக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பதைக் கரிகாலனின் செயற்பாடுகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

திருவரங்கத்திற்கு மேற்கே பெரிய அணை ஒன்றைக் கட்டி, பல கால்வாய்களின் மூலமாகக் காவிரித் தண்ணீரை உழவுக்குத் திருப்பி விட்டார் கரிகாலன். அக்கால்வாய்களில் ஒன்று தான் இப்போது தஞ்சையில் பாய்கின்ற வெண்ணாறு என்றழைக்கப்படுகிறது.

காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணை கட்டினார். கல்லும் களிமண்ணும் கொண்டு கட்டப்பட்ட இந்த அணை, 2 ஆயிரம் வருடங்களாக காவிரி வெள்ளத்தை தடுத்து வருவது மிகப் பெரிய சாதனை.

சிபிச்சோழச் சக்கரவர்த்தி, மனுநீதிச்சோழன், கரிகாலன், கோச்செங்கணான் போன்ற சோழ மன்னர்கள் சங்க காலத்தில் புகழ்பெற்று விளங்கினார்கள்.

வடக்கில் வேங்கடம் என்கின்ற திருப்பதி மலைகளும் 800 ஆண்டுகளுக்கு முன்பு வரை மேற்கில் அரபிக்கடல் இதன் எல்லையாகவும் தெற்கில் குமரி முனையும் கிழக்கில் வங்காளக் கடலும் பண்டைக்காலம் முதல் தமிழக எல்லைகளாக இருந்தன.



(தொடரும்)

இக்கட்டான தருணத்தில் நம் முன் வழி இரண்டாகப் பிரிபடுகிறது. ஒன்று இடரைக் கடந்து முன்செல்வது; இது சாதனையில் ஒரு பெரும் சித்தி இன்னொன்று போன வழியில் போகட்டும் என்று விட்டு விடுவது. இது மோசமானதும் ஆபத்தானதுமாகும்.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பலமான இரு அரசியல் கட்டமைப்பு தமிழர்களுக்கும் தேவையாகியுள்ளது

பொருளியலில் தனியுரிமை என்ற சந்தை அமைப்புப் பற்றிப் பேசப்படுகிறது.

தனியுரிமைச் சந்தை என்பது குறித்த பொருளை அல்லது சேவையை வழங்குவதற்கு வேறு எவரும் இல்லை. மாறாக ஒருவர் அல்லது ஒரு அமைப்பு மட்டுமே அந்தச் சந்தையில் ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளது என்பதாகும்.

இவ்வாறான நிலைமை இருக்கும்போது குறித்த பொருளின் விலையைத் தீர்மானிப்பதில் உற்பத்தியாளன் மட்டுமே நூறு வீத அதிகாரத்தைக் கொண்டிருப்பான்.

தவிர, குறித்த பொருள் அல்லது சேவையின் தரத்தைப் பேணுவதிலும் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

விரும்பினால் கொள்வனவு செய். இல்லையென்றால் விட்டு விட்டு போ என்ற அதிகாரம் தனியுரிமையில் கோலோச்சும்.

இந்த நிலைமை சந்தை அமைப்புக்கு மட்டுமல்ல. வேறு விடயத்திலும் பொருந்தக் கூடியது. அரசியலுக்கும் இது சாலப் பொருத்துடையதாகும்.

இதனாலேயே கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்ற பழமொழியை நம் தமிழ் மொழியில் தந்தார்கள்.

இப்போது தமிழர்களின் பொருளாதார எண்ணக்கரு பழமொழியூடாக எவ்வாறு உணர்த்தப்பட்டுள்ளதென்பதை நாம் அறிய முடியும். இது தகவல் மட்டுமே.

இதற்கு மேலாக, உலக நாடுகளை எடுத்து நோக்கும்போது அங்கெல்லாம் இரு பெரும் அரசியல் கட்சிகள் பலம்பெற்றிருப்பதைக் காண முடியும்.

இவ்வாறு இரு கட்சிகள் பலம் பெற்றிருப்பதனால் தனிக் கட்சி என்ற கர்வம் வலுக்குறைக்கப்பட்டு மக்கள் மயப்பட்ட அரசியல் என்ற சிந்தனை வலிமை பெறுகிறது. இந்த நடைமுறை இந்த நாட்டின் பெரும்பான்மை அரசியலிலும் உள்ளது.

ஆனால் இலங்கைத் தமிழர்களிடம் கடந்த காலங்களில் இந்நிலைமை இல்லை என்றே கூறலாம்.

தமிழ் மக்கள், ஒற்றுமை என்பதை முதன்மைப்படுத்தி ஒற்றைத் தமிழ் அரசியல் தலைமையைப் பாதுகாத்து வந்தனர்.

அன்றைய சூழ்நிலையில் அஃது ஏற்புடையதாயினும் நீண்ட காலத்தில் தமிழர்களுக்கான ஒற்றை அரசியல் தலைமை என்பது தமிழ் மக்கள் பற்றிச் சிந்திக்காமல் தம்பாட்டில் அல்லது தாம் நினைத்தபடி செயலாற்றுவதற்கு வழி வகுத்தது.

இத்தகைய தனியுரிமை தமிழ் மக்களை ஓரங்கட்டி குறித்த அரசியல்வாதிகளின் தேவைகளும் சுயநலப் போக்குகளும் முதன்மை பெற வழி வகுத்தது. இதுவே தமிழினத்தின் சமகால அவலத்துக்குக் காரணமாகும்.

ஆக, இனிமேல் தமிழ் அரசியலிலும் இரு பலமான அரசியல் கட்டமைப்பின் தேவை உணரப்படுகிறது. இஃது அரசியல் கட்சிகளைக் கட்டுப்படுத்தவும் அரசியல்வாதிகளை கண்காணிக்கவும் அவசியமாகிறது.

இதை நாம் கூறும்போது, ஒற்றுமை உடைக்கப்படுவதாக யாரும் நினைக்காதீர்கள்.

மாறாக ஒற்றுமைக்கு எந்த சேதாரமும் இல்லாமல் தலைமைத்துவ உருவாக்கம் நடக்கிறது.

இந்த உருவாக்கம் ஏலவே இருந்த அரசியல் தலைமை தன்னை மறுசீரமைப்புக்கு உட்படுத்துவற்கு உதவுவதாகும்.

# சுயாதீன ஆணைக்குழு அமைக்க நடவடிக்கை-பிரதமர் திட்டவட்டம்

(கொழும்பு)

**கடந்த அரசாங்கத்தின் போது நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழு உண்மையாகவே சுயாதீனமா? இல்லையா? என்பது தொடர்பில் சிக்கல் ஒன்று உள்ளமையினால் மிகவும் உயர்மட்டத்தில் சுயாதீன ஆணைக்குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் காலை வீரகெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்படும்முறையில் மாற்றும் மேற்கொள்ளுதல், 19ஆவது திருத்தத்தை நீக்குதல், அரசியலமைப்பில் மாற்றம் மேற்கொள்ளுதல் போன்ற பிரதான விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மூன்றில் இரண்டு அதிகாரம் கொண்ட சிறந்த வெற்றியை நெருக்கமாக்கி கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்பார்ப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டுள்ளமையால் இதுவரையில் பாரிய அளவிலானோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைவதற்கு ஆயத்தமாகியுள்ள நிலையில், குறித்த அனைவரையும் இணைத்துக் கொண்டு மூன்றில் இரண்டு சிறந்த வெற்றியை நோக்கி பயணிக்கும் அத்தியாவசிய சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும், இம்முறை பொதுத்தேர்தலில் அதிக ஆசனங்களின் எண்ணிக்கையை வெற்றி கொள்வதற்காக இளைஞர்களை பொதுஜன பெரமுனவுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்கால தலைமைத்துவத்திற்காக வலுவான கட்சிக்கு, வலுவான அரசாங்கத்திற்கு உறுப்பினர்களாகுவதற்காக அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் பின்வாங்காமல் வருவார்கள் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

## கிளிநொச்சி மாவட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 107 வாக்களிப்பு வாக்கெடுப்பு நிலையங்களிலும் ஆயத்தப் பணிகளை முன்னெடுத்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் சுகாதார நடைமுறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. (4-5-315)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 09 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மந்திகை உபயகதிர்காமம், வல்லிபுரம், வல்லிபுரம் தேசிய நீர்ப்பாசன சபை, டொக்யாட் முல்லை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சமனன்குளம் பிரதேசத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கொக்குப் படையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய இடங்களில்

மேலும் **மன்னார் பிரதேசத்தில்** சிறு நாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார், Palmyrah house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ்தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி Timex ஆடைத்தொழிற் சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரிஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கைதொலைத் தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும் மின்சாரம் தடைப்படும்.

## அலைபேசி செயலி அறிமுகம்

(கொழும்பு)

பயணிகள் வசதி கருதி உருவாக்கப்பட்டுள்ள அலைபேசி செயலி நேற்று உத்தியோக பூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பயணிகளின் போக்குவரத்து வசதிக்காக என்ற பெயரில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் குறித்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பேருந்துகள் பயணிக்கும் நேரம், இடம் உள்ளிட்ட தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

குறித்த செயலியை போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர, நேற்று அறிமுகப்படுத்தினார். (ஐ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**பணமே வாழ்க்கையின் இலட்சியமானால் அதை தீய வழியிலேயே தேடவும் செலவிடவும் நேரிடும். அதனால் இரண்டு விதத்திலும் வாழ்க்கை பாழாகும். -ரஸ்கின்**

## ஆன்மீகச் சிந்தனைகள்

### சத்தியமே தர்மம்

❖ குடும்பம் என்ற வண்டி ஓடுவதற்கு கணவனும், மனைவியும் இரு சக்கரம் போல இருக்கிறார்கள்.

❖ இறைவனை சிந்திக்காத நாள் எல்லாம் வீணாகக் கழிந்த நாட்களே.

❖ சத்தியத்தைக் காட்டிலும் சிறந்த தர்மம் இல்லை. பொய்யைக் காட்டிலும் அதர்மமும் இல்லை.

❖ பிறருக்கு கொடுக்காமல் சாப்பிடாதீர்கள். தானம் செய்யாமல் உண்ணும் உணவு விஷத்திற்குச் சமமானது.

❖ குடும்பத்திற்குள் நடப்பதை எல்லாம் மற்றவர்களிடம் எடுத்துச் சொல்வது நல்ல பழக்கம் அல்ல.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தேன்காய்

Botanical Name - Swietenia macrophyla
Family - Meliaceae
Engl - Mahogany seed / sky fruit



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மெக்சிக்கோ, பாரசீகம், இந்தியா, இலங்கை, அமெரிக்கா போன்ற இடங்களில் வளரக்கூடிய மரமாகும்.

தேன் காயானது மிகவும் கைப்புச் சுவையுடையது. மகோகனியினது நெத்தின் தடித்த பகுதியும் உள்பக்கம் வெள்ளையாக இருப்பதுமான பகுதியே தேன்காய் எனப்படும்.

மிகவும் பெரிய உயரமான மர வகையைச் சார்ந்தது. மளமளப்பான ஊதா கலந்த மண்ணிறமான பட்டைகளைக் கொண்டது. ஒன்று விட்ட இலையமைப்பு, கரும்பச்சை நிறமான பெரிய இலைகள் 30-90cm நீளமானவை. ஒழுங்கான இருபாலான வெள்ளை நிறப் பூக்கள் நிறையக் காணப்படும். பழங்கள் கோள வடிவ 2.5-3.7 செ.மீ. நீளமானதும் தொங்கிய வண்ணமும் காணப்படும். மஞ்சள் நிறமாகவும் பிரகாசமாகவும் இருக்கும். மண்ணிறமான விதைகள் விதைகளின் ஒரு முனை தடித்துக் காணப்படும். நுனிப்பகுதி கூர்மையாக இருக்கும்.

மாசி மாதத்தில் பூக்களை பங்குனி, சித்திரை மாதங்களில் பழங்கள் வெடித்து விதைகளை சேகரிக்கலாம். தேன்காய் எனப் பெயர் குறிப்பிடப்பட்டாலும் விதையின் ஒரு பகுதியே நீரிழிவு நோயிற்கு சிறந்தது.

இதன் விதையின் தடித்த பகுதியே மிகவும் கைப்புச் சுவையானது. புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியது.

இதனுடைய கனிகளில் glucoside, malic acid, mucilage, pectine போன்ற முக்கிய வேதியற் சத்துக்



கள் காணப்படும்.

இந்தியாவில் தேன்காயின் பாவனை நீரிழிவு நோயாளிகளால் அதிகரிப்பதால் ஆந்திரா, மஹாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களிலிருந்து விற்பனைக்கு இந்தியா முழுவதும் வருகிறது. இலங்கையில் இம் மரங்கள் கூடுதலாக வளர்ந்து இருந்தாலும் பாவனை இல்லை என்றே குறிப்பிடலாம்.

சித்த மருத்துவம் சுவை அடிப்படையில் கைப்புச் சுவைக்கு முக்கிய இடம் இருக்கின்றது. அதுவும் நீரிழிவு நோயாளிகள் கட்டாயமாக கைப்புச்சுவையை பயன்படுத்த வேண்டும்.

நீரிழிவு நோயாளிகள் தேன்காயை தொடர்ந்து 48 நாட்கள் வெறும் வயிற்றில் 1-2 விதைகள் எடுத்து வர நீரிழிவு நோய் கட்டுப்பாட்டினுள் வரும்.

இதன் அகத்துறிஞ்சலை கூட்டுவதற்காக விதைகளை எடுக்க முன்பு 2 டம்ளர் நீர் அருந்த வேண்டும். விதைகளை நுனிப்பல்லால் கடித்து உமிழ்நீருடன் கலந்து பின்பு விழுங்க வேண்டும். விழுங்கிய பின்பு 200 மில்லி வெந்நீர் அருந்த வேண்டும்.

சாதாரணமாக உடல் பலத்திற்காக நீரிழிவு நோய் அல்லாதவர்களும் தேன் காய்களை உலர்த்தி பொடித்து 1 கிராம் அளவு வெந்நீரில் சாப்பிட்டு வரலாம். ஒரு நாளைக்கு 5 தேன் காய் விதைகளுக்கு மேல் எடுக்கக்கூடாது. கர்ப்பிணிப் பெண்களும் பாலூட்டும் தாய்மாரும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

விலங்குகளுக்கு இதன் தேன்காய் பொடியை கொடுத்து ஆய்வுகள் நடத்தப்பட்ட போது இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறைந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் எடுத்தியம்பியுள்ளன.

அதியுயர் அமுக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் அதிகரித்த இரத்த கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்தவும் தேன்காயை பயன்படுத்தலாம்.

இக் கைப்புச் சுவையான தேன்காய்களுக்கு உடலின் கலங்களில் ஏற்படும் தேய்மானங்களை புதுப்பிக்கும் ஆற்றல் உள்ளது.

Fattyliver உள்ளவர்கள் தேன்காய் தினமும் ஒரு விதை வீதம் உடல் நிறைக்கு ஏற்ப பயன்படுத்தலாம்.

யாழ்.மாவட்டத்தில் இம் மலைவேம்பு (மகோகனி) மரத்தின் விதைகள் வீணாவதை பார்க்கக் கூடியதாக உள்ளது.

பெரும்பாலும் மூலிகைகளை இனங்காண்பதிலும் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதும் ஓர் காரணமாகும்.

கைப்புச் சுவையான தேன்காயானது சிறுநீரக கற்களையும் கரைக்கக்கூடியது. இதனை பயன்படுத்தும் போது விதைகளை சேகரித்து அதில் ஒரு பகுதி தடித்துக் காணப்படும். அந்த சில பகுதியை தனியாக எடுத்து உள் இருக்கும் வெள்ளை நிறப் பகுதியைத்தான் பயன்படுத்த வேண்டும்.

சித்திரை மாதங்களில் இதன் விதைகளை தாராளமாக மலைவேம்பு மரங்களின் கீழ் சேகரிக்கக் கூடியதாக இருக்கும். தேன்காயில் காணப்படும் பிளேவனொயிட்டுக்களுக்கு எதிர் ஒட்சியேற்ற தன்மை இருப்பதாகவும் எடுத்துக் காட்டுகின்றன. சித்த மருத்துவத்தில் தொன்றுதொட்டு தேன்காய் நீரிழிவு நோயிற்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

## வெலிக்கடை சிறைக்கைதிகள் படுகொலை விவகாரம் பிரதான சாட்சியாளர்களின் வாக்குமூலங்கள் மாயம்

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் நடந்த மோதலில் 27 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சாட்சியாளர்கள் வழங்கிய ஆரம்ப வாக்கு மூலங்கள் தொடர்பான பதிவு ஆவணங்கள் காணாமல் போயுள்ளன.

குறித்த ஆவணங்கள் குற்றவியல் விசாரணை திணைக்கத்தின் பொறுப்பில் இருந்த நிலையில் காணாமல் போயுள்ளதாக அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தின் பிரதான சாட்சியாளர்களான வெலிக்கடை சிறைச்சாலையின் அன்றைய பிரதான சிறைக் காவலர் பல்லேகும்புர வளாவ்வே குடா பண்டார என்பவர் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி வழங்கிய ஆரம்ப வாக்கு மூலம், கைதியான செனத் பந்துல லியனாராய்ச்சி மற்றும் மரண தண்டனைக் கைதியான இந்திக பெரேரா ஆகியோர் வழங்கிய ஆரம்ப வாக்கு மூலங்களே இவ்வாறு காணாமல் போயுள்ளன.

இந்த சாட்சியாளர்களின் வாக்குமூல ஆவணங்கள் காணாமல் போயிருப்பதன் மூலம் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றவியல் விசாரணை திணைக்களம் பக்கச்சார்பாக நடத்தியுள்ளது.

தெளிவாக புலனாகியுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் சுற்றிவளைப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## ரவி உட்பட ஆறு பேருக்கு பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு எதிராக இடைக்கால தடை

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு மத்திய வங்கி பிணைமுறிகள் ஏலங்களில் 52 பில்லியனுக்கும் அதிகமான அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க மற்றும் ஏனைய 5 பேரையும் கைது செய்வதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையை நடைமுறைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான ஏ.எச்.எம்.நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் சோஹித ராஜகருணா ஆகியோரினால் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான விசாரணைகள் முடிவடையும் வரையில் இவ்வாறு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த உத்தரவின் அடிப்படையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு எவ்வித இடையூறும் இல்லை என மூவரடங்கிய நீதிபதிகள் குழுவின் தலைவர் நீதிபதி நவாஸ் தெரிவித்துள்ளார்.

மூவரடங்கிய நீதிபதிகள் குழு உறுப்பினர்கள் மூவரும் இணக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மோ.சைக்கிள்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியைச் சேர்ந்த இராசரத்தினம் பிரதீபன் (வயது-29) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞர் நெடுந்தீவு பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

# சமுர்த்தி உத்தி...

இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-3,114)

# கார்க் கதவு...

குகேந்திரன் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நல்லூர் வீதியால் சென்று கொண்டிருந்த கார் ஒன்று வீதிக்கு சமீபமாக நிறுத்தப்பட்டு திடீரென கார்க் கதவு திறக்கப்பட்டதால் பின் பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்த மேற்படி நபர் கார்க் கதவுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

தலையில் பலத்த காயமடைந்த இவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பயனின்றி அவர் நேற்று மாலை உயிரிழந்தார். சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

விபத்தால் மூளையில் ஏற்பட்ட பாரிய இரத்தக் கசிவினால் மரணம் ஏற்பட்டது என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,9)

# தமிழ்த் தேசியக்...

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

புதிய அரசியல் சாசனத்தை அதாவது அடிமை சாசனத்தைக் கொண்டு வருவதற்காகவே தமிழர்களை பலவீனப்படுத்தி அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கொழும்பின் நிகழ்ச்சி நிரலில் சிந்திக்கவிடாமல் அடிமை வாக்காளர்களாக கடந்த 11 வருடங்களாக கூட்டமைப்பு வைத்திருந்ததாக பெருமை கொள்கின்றது.

தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை நிராகரித்த சம்பந்தன், சுமந்திரன் குழுவினர்களை மக்கள் நிச்சயம் நிராகரிப்பார்கள்.

கூட்டமைப்பை வெளியேற்றுவதே சர்வதேச விசாரணைக்கான சாவியாக அமையும். இதை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்தனர். (ம-3,250)

# குளிரூட்டப்பட்ட...

யேயான குளிரூட்டப்பட்ட நகர்சேர் தொடருந்து சேவை இந்த மாத நடுப்பகுதியில் மீள ஆரம்பிக்கப்படுகிறது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பல ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்துள்ளது.

காங்கேசன்துறை - கொழும்பு கோட்டை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர்சேர் தொடருந்து சேவை ஜூலை 18, 19 மற்றும் 20ஆம் திகதிகளில் அதிகாலை 5.10 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப்படும்.

அதேபோன்று காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு கல்கிசை நோக்கிப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைக்கான ஆசனங்களை முன்பதிவு செய்ய வேண்டும் என்று ரயில்வே திணைக்களம் பயணிகளிடம் கேட்டுள்ளது. (ம-3)

# கிழக்கு தொல்...

எனினும், இந்த வர்த்தமானி அறிவித்தலிலும் சிறுபான்மையினர் யாரையும் அரசு உள்ளடக்கவில்லை.

ஏற்கெனவே நியமிக்கப்பட்ட கிழக்கு தொல்பொருள் செயலணியில் சிறுபான்மையினர் யாரும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இது பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருந்தது. இதைச் சுட்டிக்காட்டி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

சில நாட்களின் முன்னர், பத்திரிகையாளர்களை சந்தித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சிறுபான்மையினர் இந்த குழுவில் உள்ளடக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில், நேற்று அரசு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில், ஏற்கெனவே அரசு வெளியிட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டவர்களே (தனிச் சிங்கள வர்கள்) இடம்பெற்றிருந்தனர்.

பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண, எல்லாவல மேதானந்த தேரர், தொல்பொருள் பணிப்பாளர், காணிப் பணிப்பாளர் உள்ளடங்கிய 11 பேர் இந்த செயலணியில் பெயரிடப்பட்டுள்ளனர்.(ம-3)

# கொரோனா...

பிரேசில் ஜனாதிபதி ஜெயீர் பொல்சனாரோ (jair bolsonaro) கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொரோனா தொற்றுக்குள்ளான நாடுகளின் பட்டியலில் பிரேசில் இரண்டாவது இடத்தில் உள்ளதோடு அங்கு இதுவரையில் 1,628,283 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது அந்நாட்டின் ஜனாதிபதிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமையானது அந்நாட்டு மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ம-3)

# வெலிக்கடை...

கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதற்கமைய கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலிருந்த 474 பேரும் அதன் நிர்வாக அதிகாரிகள் 131 பேரும் இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலநறுவைப் பிரதேசத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரத் ஜயசிங்க தெரிவித்தார்.

அத்தோடு வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள 170 கைதிகளும் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த சிறைக் கைதி கந்தக்காட்டிலுள்ள போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலிருந்து வழக்கின் நிமித்தம் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவராவார்.

மேலும் தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்ட கைதி கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலிருந்து பொலநறுவை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அதனூடாகவே வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எனவே அங்கு குறித்த கைதியுடன் தொடர்பினைப் பேணியவர்களையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் வேறெந்த தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திலும் தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் அவர்கள் தற்போது வசிக்கும் இடங்களிலேயே தனிமைப்படுத்தப்படுவர் என்றும் சரத் ஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளைப் பார்வையிடுவதற்கு மறுஅறிவித்தல் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ம-3)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

# வடமராட்சி கிழக்...

இதனால் அங்கு பதற்றமான நிலைமை நீடித்தது.

புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் உடுத்துறையில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். உள்ளூர் மக்கள் இதனால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், சட்டவிரோத மீன்பிடி முறைகளையும் அவர்கள் கையாள்வதால் மீன்வளம் விரைவில் அழிந்து விடும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில், நேற்று சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த புத்தளம் மீனவர்களை, உடுத்துறை மீனவர்கள் நேற்று மடக்கிப் பிடித்தனர். அவர்கள் தற்போது கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பதற்றமான நிலைமை நீடிக்கிறது.

இதனைத் தொடர்ந்து வடமராட்சியில் இராணுவம், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

# இரா...

அதிகளவான அதிகாரத்தை அனுபவித்துவரும் ஜனாதிபதியின் முக்கிய இராணுவ நண்பர்களுக்கும் மேலும் தடையற்ற அதிகாரத்தை வழங்குகிறது என்று சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் வழமையான கொள்கைகளையும் கடந்து, அதிகாரம் மிக்க இராணுவமயப்படுத்தப்பட்ட செயலணிகள் ஊடாக தன்னாட்சி அதிகாரம் உடையவர் போன்று இலங்கையின் ஜனாதிபதி நாட்டை எவ்வாறு ஆட்சி செய்கின்றார் என்பதை வெளிப்படுத்தும் விதமாக ஒரு விளக்கப்படமொன்றை சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் வெளியிட்டிருக்கிறது.

மேலும் இந்த செயலணிகள் ஒரு சமாந்தரமான அரசை உருவாக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலும் ஜனாதிபதி, அவரது குடும்பம் மற்றும் முன்னாள் இராணுவச் சகபாடிகளுக்கு ஆதரவு வலையமைப்புக்கள் மற்றும் பொதுச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான இணையற்ற அதிகாரத்தை வழங்குகிறது என்றும் சூக்கா குறிப்பிட்டிருக்கிறார். (ம-3)


மெகா பவர்
திகதி 07/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 543
N 23 14 65 71 78

நீரோகா
திகதி 07/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0684
லக்கினம் / வெற்றி இலக்கங்கள்
துலாம் 02 40 49 69

மஹஜன சம்பத
திகதி 2020/07/07
சீட்டிழுப்பு இலக்கம் 4176
M 3 6 6 2 9 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2471
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
H 04 11 23 36
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 973
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 2020.07.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
ரூ. 68,031,450/-
வெற்றி இலக்கங்கள் 39 62 70 75 F

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2854 | வர்ணம் சிவப்பு | திகதி 07.07.2020
வெற்றி இலக்கங்கள் 18 21 37 60 துலாம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,335,728
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

சப்பிரிகம
595
07.07 2020
G 07 20 33 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,771,140
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1670
சீட்டிழுப்பு திகதி 07/07/2020
வெற்றி இலக்கங்கள் 02 37 56 64 I
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50,279,964
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (3850)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## AMC Academy

Clock Tower Road, Jaffna.

சிங்கள வகுப்புக்கள்
டிசம்பர் O/L 2ம் மொழி
பேச்சு சிங்களம்.

ஆரம்பம் : 08.07.2020
இன்று பி.ப. 5.00 மணி (3239)

T.P : 077 694 4543

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-9624)

0768226240

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● ஆரம்ப சம்பளம் -15'000/- (C-9825)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் (C-9849)
பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119

## நிரந்தர வேலை வாய்ப்பு

எமது MR. Bright நிறுவனத்தில் உடனடியாகவும் மற்றும் நிரந்தரமாகவும் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. O/L, A/L சித்தி பெற்ற மற்றும் சித்தி பெறாத இளைஞர், யுவதிகள் யாவரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், கிளை முகாமையாளர், வரவேற்பாளர், களஞ்சியக் காப்பாளர் போன்ற பதவிகள் உள்ளன.

15,000/- தொடக்கம் 30,000/- வரை அடிப்படைக் கொடுப்பனவு வழங்கப்படும். நேர்முகத்தேர்வின்போது பதவிகள் தெரிவு செய்யப்படும்.

தொடர்புகளுக்கு (3237)
077 200 0018, 021 431 0018

## யப்பான் சைக்கிள்

விலை 13500/= லிருந்து

1. லேடீஸ் சைக்கிள்கள்
2. ஜென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. Belt சைக்கிள்கள்
6. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
7. டிவரஞ்சர் சைக்கிள்கள்
8. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை

நீண்டகாலப் பாவனை

யப்பான் சைக்கிள் B பசார்
மருதனார்மடம் றோட், உரும்பிராய் மேற்கு.
(மருதனார்மடம் சந்தியிலிருந்து 1 KM) (C-9850)

## மணமகள் தேவை

கிளிநொச்சி, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 இல் பிறந்த நட்சத்திரம் பூராடம் 3ம் பாதம், இராசி தனுசு மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. (3228)

மணமகன் சொந்தமாக தொழில் செய்கின்றார்

தொடர்புகளுக்கு : 077 344 9443

## வேலையாட்கள் தேவை

நெல்லியடிக்கு அருகாமையில் இயங்கும் தொழிற்சாலைக்கு பெண் ஊழியர்கள் தேவை.
( மதிய உணவும் வழங்கப்படும் ) (C-9851)

வயதெல்லை - 18 தொடக்கம் 35 வரை

தொடர்புகளுக்கு : 077 514 4943


# நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நினைவேந்தலுக்கு தடைகோரி நீதிமன்றில் மனு

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்க தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பொது மக்களுக்கு தடை விதிக்கக் கோரி மானிப்பாய் பொலி ஸாரால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றில் இன்று முன்னிலையாகுமாறு சிவாஜீலிங்கத்திற்கு அழைப்புக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை வியாழக்கிழமை நினைவுகூரப்படவுள்ளது.

இந்த நிலையிலேயே நினைவேந்தல் நிகழ்வை ஆர்ப்பாட்டமாகச் சித்தரித்து இந்தத் தடை உத்தரவை மானிப்பாய் பொலிஸார், மல்லாகம் நீதிமன்றில் கோரியுள்ளனர். (ம் - 3, 18)

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 - 04 - 1957



இறப்பு 07 - 07 - 2020

## மயில்வாகனம் மேரிபொன்றோஸ் (தங்கம்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.49, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மேரிபொன்றோஸ் (தங்கம்) நேற்று (07.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தோமஸ் - அல்வினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற லிவின்சன், பிரசாந்தி, டெல்சன், மேரிபிரதீபா (ஜெனி, அபிவிருத்தி உத்தியோகஸ்தர் - ஸ்கந்தபுரம்), டேவிட்சன் (யஸ்ரீன், ஆசிரியர் - மு/கோட்டைகட்டியகுளம் ம.வி), டிலக்சன் (டிலா) ஆகியோரின் அன்புத் தாயாரும் குவின்ரன், தவசீலன் (பிரான்ஸ்), றொசானி, கின்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2020) புதன்கிழமை மாலை 4 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிக்காக வைக்கப்பட்டு ஸ்கந்தபுரம் பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. (C-9851) தகவல்:- குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

கட்டப்பிராய் கலைமணி வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (3238)
075 203 4547


# ஏலவிற்பனை திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான ஏலவிற்பனை எதிர்வரும் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற இருந்தது.

இவ் ஏலவிற்பனை எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது என வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(ம-3)


## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
இரத்தினசாமி அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (3213)

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்)

## மீண்டும் வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9831)

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.